

# ரமணோதயம்

ஏப்ரல் 2013
காலாண்டு

ஆராதனை இதழ்
விலை ₹ 20

# ஓர் அன்பு வேண்டுகோள்

ரமணோதயம் வாசக அன்பர்களே!

ரமணோதயம் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக பொருளாதார தளர்வுகளுக்கிடையிலும் தனது சேவையில் எவ்வித சோர்வுமின்றி ரமண அன்பர்களுக்குச் சேவை செய்வதையே இலட்சியமாகக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருவது சொல்லித் தெரிவதில்லை. தனது பதினோறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நல்வேளையில் இதன் நிர்வாகம் ரமண அன்பர்கள் முன் வைக்க வேண்டிய அன்பு வேண்டுகோள் ஒன்றுள்ளது. இதுகாறும் இதனைப் பேணி வளர்த்த பெருமையனைத்தும் ரமணோதய வாசகர்களையே சாரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இனியும் ரமணோதயம் தொடர்ந்து பொருளாதாரத் தளர்வின்றி தனது பணியைத் தொடர வேண்டுமெனில் அதற்கான வைப்பு நிதி மிகவும் வலுவான நிலையில் வைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. தொடர்ந்து எவ்விதப் பொருளாதாரத் தடங்கலுமில்லாமல் இதன் பணி தொடர குறைந்தபட்சம் ரூபாய் பத்து இலட்சம் வைப்பு நிதி உருவாக்கப் பட வேண்டும். இதற்கு பகவானைப் பிரார்த்திப்பதுடன் உங்களைத்தான் இப்பொருளுதவியை அளிக்க வேண்டும் என வேண்டுகிறோம். இந்த வைப்புத் தொகையின் கணக்கில் பொருளுதவி செய்ய தாங்கள் ஆயிரம் மற்றும் அதன் மடங்குகளாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ "Ramanodhayam" என்னும் கணக்கிற்கு செலுத்த வேண்டுகிறோம். இத்தொகை அளிப்போருக்கு S80G பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

என்றும் பகவான் பணியில்,<br>
ரமண கேந்திரா டிரஸ்ட்

உதயம் 12 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 3

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

**ஆராதனை இதழ்**

**ஏப்ரல் 2013**

**ஆசிரியர்:** Dr. S. **ராம் மோஹன்**

**இணை ஆசிரியர்:** **தியாகராஜன்**

**ஆலோசகர்கள்:**

**ஏ.வி. சுப்ரமணியன், ஜா. ஜயராமன், சந்திரமௌலி**

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

**ஆண்டுச் சந்தா:** ₹ 75 **தனி பிரதி:** ₹ 20

**காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்**

**ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:**

**குமார் ராஜா:** 9444261296

**மின்னஞ்சல்:** arunamramanam@gmail.com

**மேலாளர் கண்ணன்:** 9940418375

**வடிவமைப்பு:** ஸ்ரீ ரமணாச்ரமம்

**பதிப்பாளர் & அச்சிடுபவர்:**

**குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்**

**41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004**

**உரிமை:** ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4

**தொலைபேசி:** 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2013


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ரமணோதயம் அன்பர்கள் - ஓர் கலந்துரையாடல் | | 3 |
| 2 | ஆசிரியர் உரை | | 5 |
| 3 | ரிபுகீதை | தியாகராஜன் | 21 |
| 4 | தாயும் ஆன தயாபரன் | கௌதமன் | 27 |
| 5 | நீல வானில் இரு வெண்முகில்கள் | சு. பரமேஸ்வரன் | 31 |
| 6 | மோனசன்னிதியின் மகிமை | வி. நிரஞ்சன் | 42 |
| 7 | மௌனமாயிருக்கை நன்று | பிர. கிரிதர ஜெகீதஷ் | 52 |
| 8 | பஜ கோவிந்தம் | டாக்டர் சுதா சேஷய்யன், ஜி. ஸ்ரீகாந்த் | 58 |
| 9 | நானென்னுஞ் சொல்லின் நல்லர்த்தம் | மு. சிவப்பிரகாசம் பிள்ளை | 67 |
| 10 | திருரமணக் குறள் | தாயுமானவன் | 70 |
| 11 | ரமண ஒளி | ரமண ராஜசேகர் | 72 |
| 12 | கிரிவலம் | | 73 |
| 13 | செய்திகள் | | 74 |
| 14 | இனிவரும் திருநாட்கள் | | 78 |
| 15 | ரமணோதயம் காப்புநிதி தொடரும் நன்கொடையாளர்கள் | | 79 |

# ரமணோதயம் அன்பர்கள் - ஓர் கலந்துரையாடல்

*அன்புள்ளம் கொண்ட ரமணோதயம் அன்பர்களே!*

*ரமணோதயம் துவக்கப்பட்டு வெற்றிகரமாக 12 ஆண்டுகள் ஆகிவிட்டன. இதை ஒரு பெரிய மைல்கல்லாக, சாதனையாகக் கொண்டாடலாமா? கொண்டாடலாம் - இந்தக் காரியம் நம்மால் மட்டும் நடத்தப் பட்டிருக்குமேயானால். ஆனால் இதை நடத்திக் கொடுப்பவன் ரமண பகவான் எனும்போது எல்லாம் அவன் செயலே என்று தொடர்வதே நன்று எனலாம். ஆயினும் இத்துணை ஆண்டுகாலம் ரமணோதய வாசகர்களாக இருந்து, மௌனமாம் மொழியிலேயே தங்கள் ஆதரவைத் தொடர்ந்து கொண்டுள்ள உங்களை நாங்கள் சந்திக்க வேண்டாமா! உங்களின் கருத்துக்கள் இப்பணி மேலும் செழிக்க அவசியமானது.*

*தளர்வுகள் எழும்போதெல்லாம் நம் தளர்வினுக்கு அழிவு நாடிடும் வகையில் பகவானின் கருணை ரமண அன்பர்களின் மூலம் ஆதரவாகப் பொங்கி, ஊக்கமளித்து வருகின்றது என்பது உண்மை. இந்த ரமணோதயத்தின் இதழ்கள் மேன்மேலும் ரமண மணம் தாங்கி பூத்துக் குலுங்க தங்களது மௌனம் கலைக்கப்பட வேண்டும். உங்களது ஆக்கபூர்வமான சிந்தனைகள் சிறப்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப் படவேண்டும். ரமணோதயம் மேலும் பல அன்பர்களைச் சென்றடைய உங்களது உறுதுணை அவசியமாகின்றது.*

*தங்களது பலதரப்பட்ட பணிகளுக்கிடையேயும், சேவை மனப்பான்மை கொண்டு பல ரமண அன்பர்கள் ரமணோதயத்தின் அனைத்துப் பணிகளிலும் உதவி வருகின்றனர். சிறந்த கட்டுக்கோப்பான ஒரு அமைப்பு அமையாததால் பல குறைகளை நீங்கள் தாங்கிக் கொண்டு வருகின்றீர்கள். இக்குறை நீங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.*

இவையனைத்திற்கும் துவக்கமாக ரமண வாசக அன்பர்கள், புரவலர்கள் மற்றும் சேவையாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்து, ரமணோதயத்தின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு உதவும் வகையில், வரும் மே மாதம் 19 ஆம் நாள் ஞாயிறன்று, காலை 9.30 மணிக்கு சென்னை ரமண கேந்திரம், மைலாப்பூரில் ஒரு சந்திப்பை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ரமணோதய இதழின்பால் அக்கறை கொண்டுள்ள அனைத்து அன்பு உள்ளங்களும் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

இந்த சந்திப்பில் கலந்துகொள்ள வரும் வெளியூர் அன்பர்களுக்கு தங்குமிடமும், உணவும் ஏற்பாடு செய்யப்படும். தங்கள் வருகையை கீழ்க்கண்ட முறையில் முன்கூட்டியே பதிவுசெய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். உள்ளூர் அன்பர்களுக்கும் மதிய உணவு அளிக்கப்படும்.

1) SMS மூலம் பதிவுசெய்ய எண்கள்: குமார் ராஜா - 9444261296; கண்ணன் - 9940418375

2) மின்னஞ்சல் மூலம் பதிவு செய்ய: arunamramanam@gmail.com

3) கடிதத் தொடர்புக்கு: ரமண கேந்திரா டிரஸ்ட், பழைய எண் 20, புதிய எண் 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600004.

## நிகழ்ச்சி நிரல்

நாள்: 19-5-2013.

இடம்: ரமண கேந்திரா டிரஸ்ட், பழைய எண் 20, புதிய எண் 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600004

நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம்வரை.

பகவான் பணியில்,

R. வேங்கடகிருஷ்ணன்

தலைவர், ரமண கேந்திரா டிரஸ்ட்

# ஆசிரியர் உரை

## தடை அகற்றும் தலைவன்

*ஆன்மிகத் தேடல் என்பது எது? உணர்வின் கண்காணா ஆழங்களில் நம் ஆத்மாவைத் தேடுவதே இது. வெறுமனே மனதை அமைதிப்படுத்த அல்ல. வெறுமனே மனதை அமைதிப்படுத்த நமது உணர்வு முழுவதையும் ஒருமுகப்படுத்தி, நம் உணர்வு மையத்தில் மனதைக் குவித்து, நம் உணர்வுக்குள் இறைவனைத் தேடுவதே அது. இந்த அகமுக நோக்கே உண்மையான தியானமும்.*

திடமிது பூஜை ஜபமும் தியானமும்
*உடல்வாக்கு உளத்தொழில் உந்திபற*
*உயர்வாகும் ஒன்றில்ஒன்று உந்திபற*

*- உபதேச உந்தியார், 4*

*என்று பகவான் ஆன்மிக வாழ்விற்கான படிகளைக் குறிப்பிடுகிறார். உடல், வாக்கு, உள்ளம் என்ற மூன்றும் நமது ஆன்மிக வாழ்க்கையின் கருவிகள். முதலில் பூஜையில் தொடங்குவோம். பூஜையின் போது, உடல், வாக்கு, உள்ளம் மூன்றும் செயல்படுகின்றன. உடலால் மலரெடுத்து, அர்ச்சித்து, தூப தீப நைவேத்யம் காட்டித் தொழுகிறோம். வாக்கினால் இறைவன் நாமத்தை உச்சரிக்கிறோம். உள்ளத்தால் அவனைத் தியானிக் கிறோம். இங்ஙனம் இந்த மூன்று கருவிகளும் பூஜையில்*

செயல்படுகின்றன. இது ஆரம்ப நிலை. ஜபத்தின் போது, உடலுக்கு பூஜை போன்ற வேலைகள் கிடையாது. வாக்கினால் ஜபம் செய்கிறோம். உள்ளத்தால் இறைவனை எண்ணுகிறோம். எனவே இதில் மனம், வாக்கு என்ற இரண்டு கருவிகள் மட்டும் செயல்படுகின்றன. மூன்றாம் நிலையான தியானத்தில் உடலும் செயல்படுவதில்லை, வாக்கும் செயல்படுவ தில்லை. உள்ளத்தில் மட்டும் இடையறாது ஈஸ்வர சிந்தனை இருந்து கொண்டே இருக்கும். இது மூன்றாம் நிலை. உடல், வாக்கு, உள்ளம் ஆகிய மூன்று கருவிகளையும் பயன்படுத்துவது ஆரம்ப நிலை. உள்ளமும், வாக்கும் மட்டும் செயல்படுவது அதனின்றும் நுண்ணிய உயரிய நிலை. உடலும், வாக்கும் ஒய்ந்து போய், உள்ளம் மட்டுமே செயல்படுவது மூன்றாம் நிலையாகிய மிக உயர் நிலை. மிக நுண்ணிய நிலை. சிறு பாலகன் ஒருவன் ஆரம்பத்தில் சைக்கிள் கற்றுக் கொள்ளும் போது மூன்று சக்கர சைக்கிளை ஒட்டுகிறான். அதற்குச் சரிசம நிலை தேவையில்லை. பயிலும் ஆர்வம் மட்டுமே தேவை. அதில் பயின்று முன்னேறும் போது, சரிசம நிலை, லாவகம் வந்து விடுகிறது. அப்போது அவனால் இரண்டு சக்கர சைக்கிளைக் கூட சரிசமநிலை தவறாமல் ஒட்ட முடிகிறது. அதுபோலவே, ஆன்மிக சாதனையில் முதற் படியில் உடல், வாக்கு, உள்ளம் மூன்றும் தேவைப்படுகிறது. அதனினும் உயரிய இரண்டாம் படியில் உடல் தேவையில்லை, வாக்கும், உள்ளமும் மட்டுமே தேவைப்படுகிறது. அதனினும் முன்னேறிய மூன்றாம் நிலையில் ஆன்மிக சாதனைக்கு உள்ளம் மட்டுமே தேவை. சாதனையில் முன்னேறிய ஒருவனுக்கு உடலோ, வாக்கோ தேவையில் உண்முக நோக்கும் உள்ளம் மட்டுமே தேவை. மிக்க திறமை வாய்ந்த சைக்கிள் ஒட்டி ஒருவனுக்கு ஒரு சக்கர சைக்கிள் மட்டுமே போதும் என்பது போல.

*இந்த மூன்றாம் நிலையில் இருப்பது, தீவிர மன ஒருமைப்பாடு, பூஜை, ஜபம் முதலியவற்றால் மனதைத் தூய்மை அடையச் செய்ய வேண்டும். பின் தியானத்தில் மனதை நான் யார் என்ற விசாரத்தின் மூலம் உள் நோக்கித் திருப்ப வேண்டும். இந்த விசாரத்தால், நான் யார் என்ற தன்மை உணர்வினை அறிந்து ஆழ்ந்தால், அந்த நான் என்ற ஒரே எண்ணம் கூட, கடலில் கலக்கும் நதி போல, இறையுணர்வில் கலந்து உரு அற்றதாகி, அதுவே நீயாய் ஆகிறாய்! என்கிறார் பகவான்.*

***அகமுகம் ஆர்அந்த அமலமதி தன்னால்***
***அகம்இதுதான் எங்குஎழும்என்று ஆய்ந்தே - அகஉருவை***
***நன்குஅறிந்து முந்நீர் நதிபோலும் ஒயுமே***
***உன்கண் அருணாசலனே ஓர்.***

*- அருணாசல பஞ்சரத்னம்-3*

இந்த ஆன்மிகத் தேடலில் வெற்றி பெற அடிப்படைத் தேவைகள் என்ன? ஸ்வாமி பஜனானந்த மஹராஜ், 'பிரபுத்த பாரதம்' இதழ்களில் எழுதிய தலையங்கக் கட்டுரைகளில் (தமிழாக்கம் - ஸ்வாமி ஆசுதோஷானந்தர்) ஆன்மிகத் தேடலைப் பற்றித் தெளிவுற விளக்கி யிருப்பதைக் காணலாம். ஆன்மிகத் தேடலுக்கு மூன்று முக்கியப் பண்புகள் தேவை. ஆத்மசாட்சாத்காரத்தை அடைய வேண்டும் என்ற இடையறா தாகம் முதலாவது. ஆன்மிக வாழ்வில் ஈடுபடும் பலருக்கும் இந்த ஆர்வம் இருக்கத் தான் செய்யும். ஆயினும், பெரும்பாலோருக்கு இந்த முயற்சி ஆரம்ப சூரத்தனமாகவே அமைகிறது. வீராவேசத்துடன் ஆரம்பித்த சாதனை, வெறும் அற்ப ஆசைகளால் தடைப்பட்டு இடையிலேயே நின்று விடுவதைக் காண்கிறோம். இப்படி இராமல், இந்த ஆன்மிகப் பயிற்சியை ஒரே சீராக அதிகரிக்க வேண்டும். அற்ப ஆசைகளைக் கடந்து செல்ல வேண்டும். அனாவசியமான அச்சங்களும், அற்ப ஆசைகளுமே நமது ஆன்மிக முயற்சிக்கு தடைக்கல்லாக அமைகின்றன. ஆன்மிக சாதனையின் இரண்டாவது தேவை நாம்

தன்னறிவு பெற்றவர்களாக இருப்பது. நமது ஆன்மாவில் தெய்வீக அன்பை, தெய்வீக அழகைக் காண வேண்டும். நமது ஆன்மா அன்பும், அறிவும், அழகும் நிறைந்தது என்ற இடையறாத உணர்வினால், அதனை அடையும் வலிமையைப் பெறுகிறோம். இதுவே உயரிய சாதனையை

பாவ பலத்தினால் பாவனா தீதசத்
பாவத் திருத்தலே உந்திபற
பரபத்தி தத்துவம் உந்திபற - உபதேச உந்தியார்

நான் சத்-சித்-ஆனந்த ஸ்வரூபம் என்று இடையறாது தியானிக்கும்போது, ஆரம்பத்தில் அது நமது தூய மனதின் துணை கொண்டு செய்யப்படும் பாவனையாக இருப்பினும் கூட, அந்த பாவ சாதனையினாலேயே ஆன்மிக பலம் அதிகரித்து, பாவத்தையும் அதனாலேயே கடந்து, சச்சிதானந்தம் பெறும் தகுதியை சாதகன் அடைகிறான். மூன்றாவதாக, வெறும் உணர்ச்சி வேகத்திலிருந்து நாம் விடுபட்டு, சுதந்திர உணர்வைப் பெற வேண்டும். பல சமயங்களில் நமது உணர்வு மனம் ஆன்மிக லட்சியத்தில் ஈடுபட்டாலும், உணர்வு தாண்டிய மனம் (sub-conscious mind) இதற்குத் தொடர்பின்றிச் சென்று கொண்டிருக்கும் ஓர் இழைபிரிந்திருந்தாலும் கூட ஊசியில் நூலைக் கோக்க முடியாது என்கிறார் ஸ்ரீராமகிருஷ்ணர். அது போல, நமது முழுமனமும், பிழையின்றி, பிரிவின்றி இறைவனிடம் அர்ப்பணிக்கப் படவேண்டும். அப்போதுதான் முழு இறைவுணர்வு பெற முடியும். மனதின் உணர்வுப் பகுதியையும் (conscious mind) உணர்வு தாண்டிய பகுதியையும் (sub-conscious mind) இணைந்து செயல்படல் செய்ய வேண்டும்.

உணர்வு தாண்டிய மனம், நமது பிரச்சினைக்கு மூலகாரணம் மட்டுமல்ல. எல்லையற்ற மன ஆற்றலின் இருப்பிடமும் அதுவே. உணர்வு மனம், இந்த ஆற்றலின்

சுரங்கத்துடன் இணைக்கப்படும் போது ஆன்மிக சாதனை மிகப் பலம் பொருந்தியதாய் விடுகின்றது. அங்கேயுள்ள பூர்வ வாசனைக் குப்பையினைக் களைந்து, அந்தப் பேராற்றலுடன் உணர்வு மனத்தை இணைக்க வேண்டும். இடையறாத தியானப் பயிற்சி, மனத்தன்மை, நிஷ்காம்ய கர்மம், இவற்றால் உணர்வு தாண்டிய மனம் தூய்மை அடைகிறது. அது புதிதாய்ப் பிறக்கிறது. ஜெரால்டின் கோஸ்டர் என்னும் அறிஞர் தமது 'Yoga and Western Philosophy' என்னும் நூலில் சூழ்நிலை பிடிக்கவில்லை என்றால் இடத்தை மாற்றிக் கொண்டு, புதிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்கிறோம். அது போல் தன்னிடம் திருப்தி காணாத ஒருவன், தன்னைப் புதிதாய்ப் படைத்துக் கொள்கிறான் என்கிறார்.

ஆன்மிக சாதனையில் நாம் ஈடுபடும்போது பல்வேறு தொல்லைகள் ஏற்படலாம். தொல்லைகள் இல்லாமல் வாழ்க்கையே இல்லையே! மனிதனுக்கு ஏற்படும் துன்பங்கள் மூன்று காரணங்களால் ஏற்படுகின்றன. ஆதிதைவிகம் நம்மால் காரணம் கூற முடியாத துன்பங்கள், விதிவசம் என்று நாம் கூறுபவை இவற்றில் அடங்கும். சாதகமற்ற சூழ்நிலை, திருப்தியற்ற அலுவல், எதிர்பாராத பிரச்சினைகள் ஆகியவை ஆதிதைவிகம். ஆதி பௌதிகம் என்பது பிற மனிதர்களாலோ, விலங்குகளாலோ ஏற்படும் துன்பம். மூன்றாவதான ஆதியாத்மிகம் என்பது தனக்குத் தானே உருவாக்கிக் கொள்வது. இதில் முதலிரண்டும் நமது கட்டுப் பாட்டிற்குள் அடங்குபவை அல்ல. நமது ஊழ்வினையால் ஏற்படுபவை என்று கொள்ளலாம். ஆனால் நமது தவறான எண்ணங்களாலும் நடத்தையாலும் நமக்கு நாமே உண்டாக்கிக்க கொள்ளும் ஆத்யாத்மிகத்தை நாமே நமது முயற்சியால் நீக்க வேண்டும். இதுவே, அகத்தடை. இந்த அகத்தடையை நாம் முயன்று நீக்கினால் முதலிரண்டு புறத்தடைகளும் தாமே வலுவிழந்து நீங்கிவிடும்.

பதஞ்சலி தனது யோக சூத்திரத்தில், ஆன்மிகப் பாதையில் எழும் ஒன்பது தடைகளைப் பற்றிக் கூறுகிறார்:

(1) நோய் (வியாதி) - பிராண சக்தியின் இயக்கத்தில் சமன்பாடு குறைவதால் நோய்கள் வருகின்றன. ஆரோக்யமில்லாத உடல் ஆரம்ப சாதகனுக்கு பிரச்சினையை ஏற்படுத்தும்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவார்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே!

- திருமந்திரம்-724

என்று ஆன்மிக வாழ்விற்கு உடல் ஆரோக்யத்தின் தேவையை திருமூலர் விளக்குகிறார்.

(2) ஸ்த்தானம் - (விருப்பக் குறைவு) நாம் முதலில் பார்த்தபடி ஆரம்ப சூரத்தனம் காட்டி அரைக் கிணறு தாண்டும், சாதகனின் பிரச்சினை. ஆழ்மனப் போராட்டங்களாலோ, அல்லது சாதனையின் முக்கியத்துவத்தை சரிவர உணராததாலேயோ இந்த விருப்பக் குறைவு ஏற்படுகின்றது.

(3) ஸம்ஸயம் (சந்தேகம்) - தர்மத்திலும் குருவின் வழிகளிலும் நம்பிக்கை இன்மை. இது அழிவிற்குக் காரணமாகிறது.

தேரான் தெளிவும் தெரிந்தான் கண் ஐயுறவும்
தீரா இடும்பைத் தரும்! திருக்குறள், 510

என்பது வள்ளுவர் வாக்கு.

அவசரத்தில் தவறான ஆசானைத் தேர்ந்து எடுத்து அவரைப் பின்பற்றுதல் தொல்லைக்குக் காரணமாகிறது. அதே சமயம், ஓர் உயர்ந்த குருவைத் தேர்ந்து, அவரது வார்த்தைகளிலும் முழு நம்பிக்கை வைத்து பின்பற்றுதலைச் செய்யாமல், இடையில் சந்தேகம் கொள்ளுதலும் அழிவிற்குக் காரணமாகிறது. கண்ணன்

கூறும் அறிவுரையும் இதுவே. அறிவும், நம்பிக்கையும் இல்லாத சந்தேகவாதி அழிகிறான். அவனுக்கு இகத்திலோ, பரத்திலோ மகிழ்ச்சியும் இல்லை, நம்பிக்கையும் இல்லை (கீதை 4.40). இந்தச் சந்தேகம் இரண்டு வகைப்படும். முதல் வகை, சந்தேகவாதி எல்லாவற்றையும் சந்தேகத்துடனே பார்த்து எதையுமே பின்பற்ற மாட்டான். இது அழிவு சேர்க்கும் சந்தேகம். ஆக்கபூர்வ சந்தேகம் - அடிப்படை உண்மைகளைத் தேடும் சந்தேகங்களும், கேள்விகளும் நலனை விளைவிப்பவை என்பதும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கேள்விகளே கேட்காத சாதகன் வழிதவறும் வாய்ப்பும் உண்டு. சாதகனின் செயல்பாடு பற்றிக் கூறும் போது பரிப்ரஸ்நேந ஸேவயா என்று உபநிஷதம் விளக்குகிறது. சிறந்த சாதகன் ப்ரிப்ரஸ்னம் - உயரிய நோக்கம் கொண்ட, ஞானத்தைத் தேடும் கேள்விகளைக் கேட்பவன், அதே சமயம், குருவிற்கு மனம் உவந்த சேவையையும் செய்வான். இந்த இரண்டாம் வகையினரைப் பற்றிக் குறிப்பிடும் போது, ஸ்வாமி விவேகானந்தர் அறிவால் எய்திய முடிவு எவ்வளவு வலிமை உடையதாய் இருப்பினும், ஆன்மிக அனுபவங்கள் வரும்வரை சந்தேகங்கள் எழத்தான் செய்யும் என்கிறார்.

(4) ப்ரமாதம் - மறதி அல்லது கவனம் இன்மை - ஸனத் ஜாதீய நூலில் மரணம் என்பது என்ன? என்ற திருதராஷ்டிரனின் கேள்விக்கு, கவனம் இன்மையே மரணம்! (ப்ரமாதம் வை ம்ருத்யு: ) என்று ஸனத் ஸுஜாதர் பதில் அளிக்கிறார். தீவிர ஆன்மிகத் தேடலை விட்டு விட்டு, வெளி விஷயங்களில் மனம் ஓடுதல், ஆன்மிகப் படிப்பில் கவனமிழத்தல், நண்பர்களைத் தேர்ந்து எடுப்பதில் கவனமின்மை, எனப் பல்வேறு விஷயங்களில் கவனம் இன்மை, நம் ஆன்மிக முன்னேற்றத்திற்கு விரோதி ஆகிறது. ஆன்மிக சாதனையை நேரப்படி ஒழுங்காகச் செய்யாமல், கவனத்தைத் தவறவிட்டால், மனதில் அழுக்குகள் சேர்கின்றன. எனவே, கவனத்தைச்

*சிதறவிடக் கூடாது. பகவான் ரமணர் தனது பதினாறாம் வயதில் தீவிர கவனத்துடன், நான் இறக்கிறேன் என்னும் போது, யார் இறக்கிறார்கள்? என்று வினவிய போது ஆன்ம சாட்சாத்காரம் பெற்றார் அல்லவா? அத்தகைய தீவிர கவனம் தேவை.*

*(5) ஆலஸ்யம் - தூக்கம், களைப்பு போன்றவை - தமோகுணம் மேலிடும்போது அது தூக்கமாகவும், சோம்பலாகவும் வெளிப்படுகிறது.*

***நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்***
***கெடுநீரார் காமக் கலன்! - திருக்குறள், 605***

*என்று இந்த இரண்டு தடைகளையும் பற்றி வள்ளுவர் கூறுகிறார். மறதி என்பது ப்ரமாதம், மடி துயில் என்பவை சோம்பலும், தூக்கமும். இவை மேலோங்கும் போது, அவை நம் அழிவிற்குக் காரணம் ஆகின்றன என்கிறார் வள்ளுவர்.*

*(6) விஷய வஸ்துக்களின் கவர்ச்சி - நான் துறவி; விஷய நாட்டத்தைத் துறந்து விட்டேன் என்று புறத்தில் எல்லாவற்றையும் துறந்து இருந்தாலும், மனத்தளவில் அவற்றை எண்ணி இருத்தல் ஒரு பெரும் தடை.*

***அக்[3]ரே வஹினஹ் ப்ருஷ்டே[2] பா[4]னு:***
***ராத்ரௌ சுபு[3]க ஸமர்பித ஜானு:***
***கரதலபி[4]க்ஷஸ்தருதலவாஸ:***
***தத[3]பி ந முஞ்சத்யா ஆஶாபாஶ:***

*என்று பஜகோவிந்தத்தில் ஸ்ரீ சங்கரர் கூறுகிறார். எல்லாவற்றையும் விட்டுவிட்டு, மேலே கூரை கூட இல்லாமல் வெட்டவெளியில் சூரிய ஒளி தகிக்க, கையிலே பிச்சை எடுத்துக் கொண்டு மரத்தடியிலே துறவி வாழ்ந்தாலும் அடிமனதிலே ஆசாபாசங்கள் போவதில்லை என்கிறார் பகவத்பாதர்.*

*(7) மனமயக்கம் - அநேக சாதகர்கட்கு இடையிலே ஏற்படுவது. ஆன்மிக முன்னேற்றத்தைத் தடை*

*செய்கிறது. இதனால் மனம் தோற்றுவிக்கும் கற்பனைக் காட்சிகளை உண்மையான அனுபவமாக எண்ணிக் கொண்டு மனமயக்கம் அடைந்து, தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வது. இங்ஙனம் போலி அனுபவங்களால் அமையும் சீட்டுக்கட்டு மாளிகை விரைவிலே சிதைவுறும். உமா என்ற போலந்து நாட்டைச் சார்ந்த பக்தை பகவானிடம் கேட்டார்: நான் ஆழ்ந்த தியானத்தில் இருக்கும் போது எனக்கு முன் சிவபெருமான் தோற்றம் அளிக்கிறார். கொஞ்ச நேரத்தில் மறைந்து விடுகிறார். இந்த சிவ தரிசனம் மறையாமல் இருக்க நான் என்ன செய்ய வேண்டும்? என்று வினவினார். அதற்கு பகவான் உண்மையான ஸத்-ஆத்மா தோன்றுவதுமில்லை, மறைவதும் இல்லை. அது எப்போதும் உன்னுள்ளே நிரந்தரமாக ஒளிர்கிறது. தோன்றுவது எதுவும் அது சிவ தரிசனமாக இருந்தால்கூட அது மறைந்துதான் தீரும். அது மனதால் உண்டாக்கப்பட்ட மனோ மயக்கக் காட்சி. எனவே, அதை விடுத்து பரிபூர்ணமான தோன்றி மறையாத ஆத்மாவை விசாரத்தால் அறிந்து, அதிலே ஒடுங்குதலே உண்மையான சாதனை என்று கூறுகிறார்.*

*தோன்றி மறையாது ஒளிரும்*
*பூன்றமாம் அஃதே பொருள்*

*என்று இதனை பகவான் உள்ளது நாற்பது (7) நூலில் குறிப்பிடுகிறார்.*

*(8) மற்றும் (9) அலப்த பூமித்வம் மற்றும் அனவஸ்தித்வம் - பதஞ்சலி கூறும் எட்டாம் மற்றும் ஒன்பதாம் தடைகள் அலப்த பூமித்வம் மற்றும் அனவஸ்தித்வம் ஆகியவை. இது ஆன்மிக வாழ்வில் முன்னேறிய, ஆனால் இன்னும் முழுமையாக முன்னேற்றம் அடையாத சாதகர்கட்கு ஏற்படுபவை. அலப்த பூமித்வம் எனப்படும் எட்டாம் தடை முழுமையான ஆன்மிக உணர்வு நிலையை அடைய முடியாமை, அப்படியே அடைந்தாலும் இந்த உணர்வை*

தக்க வைத்துக் கொள்ளாமல் சறுக்குதல் (அனவஸ்தித்வம்) ஒன்பதாவது தடை. இவை இரண்டும், குருவைப் பூரண சரணாகதி செய்யும்போது அவர் பேரருளால் நீங்குபவை.

சாங்கிய காரிகை நூறு விதமான தடைகளைக் கூறுகிறது. இவை விபர்யயம் (தவறான அறிவு) அசக்தி (வலிமை இன்மை அல்லது பலவீனம்), துஷ்டி (திருப்தி) என மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது.

விபர்யம் ஐந்து வகைப்படும், அறியாமை, அஹங்காரம், கவர்ச்சி, வெறுப்பு, வாழ்க்கையில் தீவிரப்பற்று ஆகியவை. அசக்தி அல்லது பலவீனம் 28 வகையாக கூறப்படுகிறது. இது உடல் பலவீனம் அல்ல. இது ஆன்மிக பலவீனம். உண்மையான ஆன்மிக முன்னேற்றம் பெற, ஆன்மிக பலவீனம் நீங்க வேண்டும். இதனைப் பெற, நம்முடைய இடையறாத முயற்சியுடன் குருவருளையும், இறை அருளையும் வேண்டிப் பிரார்த்திக்க வேண்டும்.

நாயமாத்மா பலஹீனேன லப்ய:

ஆத்மா பலமற்றவனால் அடையப்படுவதில்லை என உபநிடதம் கூறுகிறது. நம்முடைய பலவீனங்களை நாமே உணர்ந்து, அதை நீக்க முயற்சி செய்து எல்லையற்ற வலிமையின் இருப்பிடமாகிய பகவானிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

ஸுக[3]ந்தி[4]ம் புஷ்டி வர்த[4]னம் என்று ஸ்ரீ ருத்ரத்தில் இறைவன் துதிக்கப்படுகிறான். அவன் நமது தீய வாசனைகளை நீக்கும் ஸுகந்தம். நமக்கு ஆன்மிக வலிமை அளிப்பவன். அவனை உள்ளார்ந்த அன்போடு வழிபடும்போது, நாம் ஆன்மிக வலிமை பெற்று, வெள்ளரிப் பழம் பழுத்த பின் கொடியிலிருந்து விடுபடுவது போல, உலக வாழ்விலிருந்து விடுபடுவோம்.

துஷ்டி என்பது மிகச் சிறிய ஆரம்ப நிலை அனுபவத்தையே முழுமை என்று எண்ணிக் கொண்டு

அதிலேயே திருப்தி அடைந்து, சாதனையை நிறுத்திக் கொள்வது. பெரும்பான்மையான சாதகர்கட்கு ஏற்படுவது இது. ஆரம்பத்தில் சில காலம், சாதகர்கள் ஜபதப தியானத்தில் தீவிரமாக உற்சாகமாக ஈடுபடுகின்றனர். அதன் காரணமாக சிறிது மனத்தூய்மையையும், மன அமைதியையும் பெற்றவுடன் இதுதான் எல்லாம் என்று தவறாக எண்ணிக்கொண்டு, சாதனையை நிறுத்திக் கொள்கின்றனர். வேறு சிலரோ, பூஜை அலங்காரத்துடன் திருப்தி அடைகின்றனர். சிலர் நிறைய புத்தகங்களைப் படிப்பதால் திருப்தி அடைந்து ஆன்ம ஞானம் பெற்று விட்டதாக எண்ணுகின்றனர். வேறு சிலர் காவி உடை, கமண்டலம் போன்ற புறச் சின்னங்களுடன் திருப்தி அடைகின்றனர். சிலர் எதற்கும் தக்க காலம் வந்தால் தானே நடக்கும் என்று சாதனையை விட்டுவிடுகின்றனர், வேறு சிலர், ஆன்மிகத்தில் முழு பக்குவம் அடையும் முன்னே, முழுமையான நிலையை அடைந்துவிட்டதாக எண்ணிக் கொண்டு, ஊருக்கு உபதேசம் செய்யப் புறப்பட்டு விடுகின்றனர். இந்தக் கீழ்நிலையிலேயே திருப்தி உணர்வுகள், உண்மையான ஆத்ம சாதனையை நீர்த்துப் போகச் செய்துவிடுகிறது. ஸ்ரீராமகிருஷ்ணரின் அழகிய உவமையை ஸ்வாமி பஜனானந்தர் எடுத்துக் கூறுகிறார். வணிகர்கள் தானியக் கிடங்குகளில் தானியங்களைக் குவித்து வைத்து இருப்பார்கள். இந்தத் தானியங்களைச் சுற்றி நெற்பொரியைத் தூவிவிடுவார்கள் நெல்லைத் தின்ன வருகின்ற எலிகள் இரவு முழுவதும் இந்தப் பொரியையே தின்று விட்டு, நெல்லின் பக்கமே போகாமல் இருந்து விடுகின்றன. உண்மையான சத்து மிகுந்த தானியத்தைத் தின்ன வந்த எலிகள், வெறும் பொரியைத் தின்று திருப்தி அடைதல் போன்று, பூர்ண சாட்சாத்காரம் பெறுவதற்காக சாதனை செய்ய வந்த மனிதன் வெறும் வெளிப் போக்கான உணர்வுகளிலும், மகிழ்ச்சியிலும் திருப்தி அடைகின்றான். இதுவே துஷ்டி என்னும் தடை.

*இந்த எல்லாத் தடைகளுக்கும் மூலகாரணம் அஹங்காரம் அல்லது அஞ்ஞானம். இதை நீக்குவதே ஆத்மசாதனை, ஆன்மா சுடர்விடுகின்ற இதய வாயிலில் நமது எண்ணத்தை உண்முக நோக்கால் நிலைப்படுத்தி இந்த வாயிற்கததவைத் திறக்கும்படி இறைவனை வேண்டுவதே ஆன்மிகப் பயிற்சி அல்லது சாதனை. அப்போது, இறையருள் வெளிப்பட்டு நம்மை அரவணைத்துக் கொள்கிறது. எல்லாத் தடைகளுக்கும் மூலகாரணமாகிய அஞ்ஞானத்தை இறையருள் பொழிவு அழித்து விடுகிறது. சாதகர் உள்ளத்துள் உறைகின்ற நான், அவரகள் மீது கொண்ட கருணையால், ஞானதீபம் ஏற்றி, அவர்களது அஞ்ஞானமாகிய தடையை அழிக்கிறேன் என்று கண்ணன் உறுதி அளிக்கிறான். (கீதை 40.11).*

*அப்படி எப்போதும் இறைவனை உள்ளத்தால் தியானிக்க முடியாத போது, அதற்கு சிறந்த வழி, சத்தங்கத்தை நாடுவதே.*

*சத்சங்க$^3$த்வே நிஸ்சங்க$^3$த்வம்*
*நிஸ்சங்க$^3$த்வே நிர்மோஹத்வம்*
*நிர்மோஹத்வே நிஶ்சல தத்வம்*
*நிஶ்சல தத்வே ஜீவன் முக்தி:*

*என பகவத் பாதர் கூறுகிறார். சத்சங்கத்தினால் விஷய வஸ்துக்களுடன் உண்டான தொடர்பு அறுபடுகின்றது. இந்த விஷயத் தொடர்பு அறுபடுவதால், ஆசை அற்ற நிலை உண்டாகிறது. மோகம் அற்ற நிலை அடைவதால், மனம் சலனமில்லாமல் இறைவனையே பற்றி நிற்கின்றது. இந்த அசைவற்ற மன உறுதியால், ஜீவன் முக்தியை சாதகன் அடைகிறான் என்பது இதன் பொருள்.*

*நம்முடைய அறிவை வெளி விஷயங்களை அறிவதிலேயே செலவிட்டு அதனால் விஷய மூட்டைகளை மனத்தே நிறைய விட்டு அலைந்தால், செருக்கு மிகுவதைத் தவிர பயன் ஏதும் இல்லை. இதற்காகச் செலவிட்ட ஏராளமான நாட்களை*

*இறைவனை, அடைய வேண்டும் என்ற தீவிர தாகத்துடன் நம் உள்ளே போய் மனத்தைத் திருப்பி விசாரம் செய்தால் எவ்வளவு நன்மை உண்டாகி இருக்கும். கடவுளது தோற்றம் அத்தகையது, அவரது அடையாளங்கள் இவை, இவை; அவரை அடையும் வழிகள் இவை, இவை - என்று ஆயிரக்கணக்கான நூல்களை அனுபவம் சிறிதும் இன்றி படிப்பதால் பயன் ஏது? ஏன் இதைவிடுத்து நீங்கள் மனத்தின் உள்ளே புகுந்து இறைவனைத் தேடக் கூடாது? - என்று வினவுகிறார் அப்பர் சுவாமிகள்.*

*குறிகளும் அடையாளமும் கோயிலும்*
*நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்*
*அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்*
*பொறியிலீர்! மனம் என் கொல் புகாததே!*

*- திருக்குறுந்தொகை*

*என்று அப்பரின் கேள்வி.*

*வெளிக் கல்வியில் மனதைச் செலுத்தும் போது, அகலமான அறிவு மட்டுமே உண்டாகிறது. இந்தப் பயணத்தை மாற்றி உள்ளே மனதைத் திருப்பி விட்டால் மனம் இதயத்தில் வந்து நிற்கும். அகமுக நோக்கினால், அகிலம் ஒடுங்கி, ஆழம் அதிகமாகும். மனம் நுண்மையாகும் வேறுபாடுகள் நீங்கும். இந்த நுட்ப உணர்வை நாம் நமது இதயாகாசத்தில் அறிந்தால் நமது எண்ணம் அழிந்து சாட்சாத்காரம் கிடைக்கும்.*

*நுண்ணுரு உனைநான் விண்ணுரு நண்ணிட*
*எண்ணலை உறும் என் அருணாசலா!*

*என்று பகவான் அக்ஷரமணமாலையில் (57) குறிப்பிடுகிறார்.*

*எப்போதும் புறநோக்கிலேயே பழகிப் போன நமக்கு உள்முகப்பார்வை என்பது ஆரம்பத்தில் சிரமமாக இருக்கும். இந்த உண்முக நோட்டத்திற்குத் தடைகள் ஐம்புலன்கள். இந்த ஐம்புலன்களின் வெளிமுகக் கவர்ச்சிக்கு அகப்படாமல் கூர்ந்த மன*

ஒருமைப்பாட்டுடன் உள்ளே நோக்க வேண்டும். அப்போது பசுமரத்தாணிபோல் இறைவன் அருள் உள்ளத்தில் பதிகிறது. வெளிமுகப் பார்வையோ ஆகாயத்தில் ஆணி அடிக்க முயல்வது போன்றது. அதனால் எதையுமே இறுதியில் அடையமுடியாது. உள்முகப் பார்வை நன்கு பதிந்து விட்டால் இறைவன் அருள் கூடி, பிறவிக்கெல்லாம் காரணமான அஞ்ஞானம் அழிந்து, சம்சார பந்தம் தொலையும்.

*சாத்திரம் ஓதும் சதுரர்களை விட்டு நீர்*
*மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்*
*பார்த்த இப்பார்வை பசுமரத்து ஆணிபோல்*
*ஆர்த்த பிறவி அகல விட்டுஓடுமே!* - திருமந்திரம், 8

(சதுர் - திறமை, மாத்திரைப் போது - சிறிய காலம், மறித்து - திருப்பி).

பகவானின் மதுரை மரண அனுபவம் இந்தத் திருமந்திரப் பாடலில் விளக்கம் பெறும். பாடம் பயில்வதை விட்டு, சிறுவன் வேங்கடராமன் மிகச் சிறிய நேரத்திலேயே மனதைத் திருப்பி உள்ளே இதயத்தில் பதித்தான். அப்போது, நான் உடல் அல்ல, உலகமல்ல. எல்லாவற்றையும் கடந்த பரவஸ்துவே நான் என்ற பேருண்மை பசுமரத்தாணிபோல் அவன் உள்ளே புகுந்து அந்த ஆத்மசாட்சாத்காரம் அவனது பிறவிப் பந்தங்களை அடியோடு கட்டறுத்து பகவான் ரமணராக ஆக்கியது.

முன்னே நாம் கண்ட தடைகள் அனைத்தையும் நீக்க வல்ல தலைவன் அவனே. அந்தப் பகவான் மீது நாம் கொள்ளும் தீவிர பக்தி நம் இதய வாயிற் திறந்து நம்மை சாட்சாத்காரம் அடையச் செய்யும்.

சிறு குழந்தை வீட்டிற்கு வரும், எல்லோருடனும் மகிழ்ச்சியாகப் பழகுகிறது. யார் எடுத்தாலும் கைக்கு வருகிறது. எல்லாரிடமும் விளையாடுகிறது. ஆயினும் பசி வந்துவிட்டால், வேறு யாரையும் நாடாமல், தாயையே நாடிச் செல்கிறது. மற்றைய சமயங்களில்

பிறரோடு கொஞ்சி விளையாடினாலும் தன் பசியை ஆற்றிக் கொள்ள தன் தாயையன்றி வேறு யாரைப் பற்றியும் பயனில்லை என்று அதற்குத் தெரியும்.

அப்படித்தான் உண்மையான சாதகன் இருப்பான். எல்லா தெய்வ உருவங்களையும் வணங்கி வழிபட்டாலும், எல்லா இறையவர்களையும் மதித்தாலும், பகவானின் திருவடியை அன்றி வேறு எதையும் மனத்தே கொள்ளமாட்டான். முருகனார் போன்ற அன்பர்கள் அங்ஙனம் ஒருமைப்பாட்டுடன் பகவானைச் சரண் புகுந்தவர்கள். காசி யாத்திரை போகலாமா? என்று அழைத்த அன்பர்களிடம், ஜாஜ்வல்யமாக ஒளி வீசும் திருவருள் கண்டபின் என் கண்கள் குருடாகிவிட்டனவே! இனி எங்கு போய் எதைக் காண முடியும்? என்று கூறிய ஒருமுகபக்தி நமக்கும் வேண்டும்.

கொள்ளேன் மனதில் நின் கோலம் அல்லாது, என்று விளம்புகிறார் அபிராமி பட்டர். அதே சமயம் சத்சங்கத்தின் சிறப்பையும் கூறுகிறார். அன்பர் கூட்டந் தன்னை விள்ளேன் என்று.

வீதிக்கு நடுவே தீபத்தை ஏற்றி வைத்தால் அது நிற்காது. சுவர்களால் பாதுக்காக்கப்பட்ட நமது பூஜை அறையில் அது காற்றினால் சலனப்படாமல் நின்று எரிகின்றதல்லவா? உள்ளத்தே பகவானின் திருப் பாதங்களைத் தியானம் செய்பவருக்கு பாதுகாப்பான சூழ்நிலையை சத்சங்கம் ஏற்படுத்திக் கொடுக்கிறது. இந்தப் பாதுகாப்பான சூழ்நிலையில் நம் பகவானைத் தியானிக்கும் போது, நமக்குத் தகுதி இல்லாவிட்டாலும் அவன் தானே வந்து அருள் புரிவான்.

திருமுறையில் கருவூர் தேவரின் பாடல் ஒன்று நினைவிற்கு வருகிறது. கங்கை கொண்ட சோழபுரம் கோயில் சென்ற கருவூர்த் தேவர் அங்குள்ள பெரிய சிவலிங்கத்தைக் கண்டு வியந்து நிற்கிறார். எத்தனை



பெரிய லிங்கம் என்று எண்ணுகிறார். அப்போது, திருவண்ணாமலையில் மலையே லிங்கமாக உள்ளதே அது எவ்வளவு பெரியது என்று எண்ணுகிறார். இப்போது காணுகிற மலை முதன் முதலில் ஜோதியாகத் தோன்றி அடங்கிய உருவம் தானே! முதன்முதலாக ஜோதி லிங்கமாகத் தோன்றிய போது எவ்வளவு பிரம்மாண்டமாக இருந்திருக்கும் என்று மலைத்தார். எவ்வளவு வியப்பு இது! என்று எண்ணினார். அப்போது மற்றொரு நினைவு எழுந்தது. இதை விட வியப்பு ஒன்று உள்ளதே. அவ்வளவு பரந்து உயர்ந்த பகவான் நம்மைப்போல் சிறிய அறிவும், சிறிய ஆற்றலும் உடையவர் உள்ளத்திலும் புகுந்து ஒளிர்கின்றானே. அவன் பேரருளை என்ன என்று சொல்வது! என்று வியக்கிறார்.

அன்னமாய் விசும்பு பறந்து அயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னை ஆள் விரும்பி என் மனம்புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்!

- கங்கை கொண்ட சோளேச்சரம், 133

(விசும்பு - வானம், அயன் - பிரம்மா, மறக்கேன் - மறக்கமாட்டேன்)

அந்த பகவான் பேரருளை மறக்காமல் மீண்டும் கருத்துப் பரிமாறலைத் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்

ராம்மோஹன்

# ரிபு கீதை

## தியாகராஜன்

அத்வைத சொரூபத்தின் அபேத நிஷ்டை உரைக்கும் ரிபுகீதையின் 26-ஆவது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால் அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று ஸ்ரீ பகவான் அருளியுள்ளார். அந்த அத்தியாயத்தின் பாடல்களை, ஸ்ரீபகவான் அவ்வப்போது அவை தொடர்பாக அருளியுள்ள விளக்கங்களோடு பக்தர்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

எதனிடையிற் காமமொடு கோப மில்லை
யெதனிடையி லுலோபமொடு மோ மில்லை
யெதனிடையின் மச்சரமு மதமு மில்லை
யெதனிடையின் மற்றமனத் துகளு மில்லை
யெதனிடையிற் பந்தமெனு மயலு மில்லை
யெதனிடையின் மோட்சமெனு மயலு மில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய். (26/13)

எதனிடையி லாதியிலை யந்த மில்லை
யெதனிடையி லடிநடுவு முடிவு மில்லை
யெதனிடையிற் றலமுமிலை தெய்வமில்லை
யெதனிடையிற் றானமிலை தரும மில்லை
யெதனிடையிற் காலமிலை தேச மில்லை
யெதனிடையிற் காண்கின்ற வத்து வில்லை
யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய். (26/14)

(ர.ம.பொ.-270-71) கேள்வி: சமாதி என்பது என்ன?

பகவான்: யோக நூல்களில் இந்த வார்த்தை ஓர்வகை பரவச நிலையை (மெய்மறப்பை)க் குறிக்கிறது.

சமாதியில் பலவகைகள் உள்ளன. நான் கூறும் சமாதியோ அவற்றினின்றும் வேறுபட்டது. இதுவே சகஜ சமாதி எனப்படுவது. இந்த நிலையில் உங்கள் நடவடிக்கை யாவற்றிலும் அமைதியுடனும், சஞ்சலமற்ற சாந்தப் பிரசன்னத்துடனும் இருந்து வருவீர்கள். ஆழ்ந்த, உள்ளார்ந்த சத்திய ஆன்மாவே உங்களை இயக்குவிக்கிறது என்பதையும், உங்களது செயல், சொல், சிந்தனை எதுவுமே உங்களுடைய மெய்யான ஆன்ம நிலையைப் பாதிக்காது என்பதையும் உணர்வீர்கள். அந்த உணர்வோடு உள்ளூர ஒன்றிய நிலையில் உங்களுக்குக் கவலைகளோ, மன உளைச்சல்களோ, சொந்த விருப்பு வெறுப்புகளோ இராது. ஏனெனில், அகந்தை ரூபமாய் உங்களைச் சார்ந்தவை எதுவுமே உண்மையில் உங்களுடையவை அல்ல; அவை உங்களது நிஜ சொரூபத்தை தீண்ட மாட்டாதவை, நடப்பவை யாவும் வேறு ஏதோ ஒன்றின் இயக்கங்களே, மெய்ம்மையாம் அந்த ஒன்றில் நீங்கள் ஒருமை கொண்டுள்ளீர்கள் என்பதை அறிவீர்கள்.

(ர.ம.பொ.-275-77) பக: 'தேகமே நான்' என்று கருதும் பாமரன் தேகத்தையும் அதன் உபாதைகளையுமே உணர்கிறான். தனியான ஜீவ-வியக்தித்துவம் இன்றி, எல்லாம் தானாகவே உணரும் ஞானிக்கு அவனது உடலும் அதன் இன்ப-துன்ப அனுபவங்கள் அனைத்தும் ஆன்மாவைச் சார்ந்து நிற்பினும் ஆன்மாவைத் தீண்டுவதில்லை. அனைத்தும் பிரும்மாகாரமே ஆகும். இதுதான் அஞ்ஞானிகளுக்கும் ஞானிகளுக்கும் இடையேயுள்ள பேதம். வலியோ வேதனையோ இருந்தால் இருக்கட்டுமே! அதுவும் ஆன்மாவின் கூற்றே. ஆன்மாவோ பரிபூரணமானது; தோஷம் அற்றது.

அனைத்து நற்குணங்களும் தெய்வீகத்தன்மை வாய்ந்த இயல்புகளும் ஞானத்தின் உள்ளடக்கம். துர்குணங்களும் பேய்த்தனமான கொடிய செயல்களும் அஞ்ஞானத்தின் உள்ளடக்கம். ஞானம் உதிக்கையில் இறைமைக்குரிய

*இயல்புகளும் தாமாகவே வந்தடைகின்றன. ஆகவே, ஞானி என்பவர் பொய் பேசவோ, பாபச் செயல் புரியவோ முற்றிலும் இயலாதவர்.*

***(வச.-2/19)*** *கே.: காமக்ரோதாதிகளை அடக்குதல் எப்படி?*

*பக.: இவ்வுணர்ச்சிகள் யாருக்கென்று உள்ளாழ்ந்து நோக்கினால் நானென்னும் தனிமுதல் ஒன்றுமில்லை எனக் காண்போம்; அவ்வுணர்ச்சிகளும், பிற நினைப்புகளும் வேரோடு ஆழ்ந்து விடும். அங்கே மிஞ்சுவது நினைப்பேதுமற்று, மன நினைப்புக்களால் பாதிக்கப்படாத தூய அறிவொன்றே.*

***(வச.-1/188-89)*** *கே.: காம விகாரத்தைக் களைவ தெப்படி?*

*பக.: தேகம் நான் என்னும் தப்பு அபிப்பிராயத்தைக் களைந்தால் அத்துடன் துர்வாசனை அனைத்தும் ஒருங்கே நீங்கும். வடிவற்ற ஆத்மாவில் ஆண் பெண் முதலிய பேதம், குணங்குறி ஒன்றுமில்லை.*

*கே.: இவ் வனுபவத்தைப் பெறுவதெப்படி?*

*பக.: நான் உடல் என்று எண்ணினால் பிறரையும் உடலாகவே காண்போம். உடல் நானல்ல என்று அறிந்து ஆத்மாவாய் இருந்தால் வேற்றுமை விகாரம் எதுவும் தோன்றாது.*

***(ர.ம.பொ.-171)*** *பக.: பந்தம், முக்தி இவைகள் கேவலம் எண்ணப் புடைப்பெயர்ச்சிகளே யாம். அவை தமக்கென ஓர் சொரூபம் அல்லது மெய்ம்மை உடையன அல்ல. ஆகவே அவை சுயமாக இயங்கக்கூடியவையும் அல்ல. வேறொன்றின் பரிணாமங்களாகிய அவற்றிற்கு மற்றொரு மூலத்தை ஒப்பியவாறே பற்றிப்படர வேண்டியுள்ளது. அவ்வாறான பந்த-முக்திகள் யாருக்கு என அந்த மூல முடிவை விசாரிக்கப் புகுந்தால், அவை*

*எனக்கு என்றே தோன்றும். எனக்குத்தான் என்றால் அந்த யான் யார் என தன்னைத் தானே மேன்மேலும் விசாரித்துக்கொண்டே போனால், சொரூபமாக நான் என்றதோர் பொருளே இல்லை எனக் காண்போம்! இவ்வாறு நான் இல்லை என்று கண்டபின் எஞ்சி இருப்பது தான் தானாகவே இருந்தபடி இருந்து இலகுவது (ஒளிர்வது) உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். புறநோக்கில் வெறுமனே வார்த்தைகளால் காலத்தைக் கடத்தாமல், அகநோக்கில் உள்ளபடி இருந்தவண்ணம் ஆன்ம விசாரணையைத் தொடரும் யாவர்க்குமே இந்தப் பேருண்மை அனுபவ ரூபமாகச் சட்டெனத் தோன்றல் சகஜமே ஆகும். ஆகையால், தானாகிய ஆன்ம சொரூபத்தில் பந்த-முக்திகள் ஒருபோதும் கிடையாது என்பதில் சந்தேகமே இல்லை.*

*(வச.-2/72) பக.: எல்லாத் தோற்றங்களும் தன்னுள் நிகழ்வனவே. கனவின்போது கனவுலகிற்குப் போகிறோமா, அல்லது கனவு நம்முள் நிகழ்கிறதா? அவ்வாறேதான் விழிப்பு நிலையும் மறுபிறவியும். தூக்கத்தின்போது தேசகாலம் எதுவுமில்லை. நானென்னும் அகந்தை எழுந்த பின்னரே அவை தோன்றுகின்றன. தேசகாலங்கள் அகந்தைக்கே தோன்றுமதனால், அகந்தை அற்ற தூக்கத்தும் இடையறாது இலகும் நமக்குத் தேச-காலங்கள் எவையுமில்லை. நாம் அவற்றைக் கடந்துள்ளோம். தேச காலங்களற்று கேவல ஞப்தி (உணர்வு) மயமாகவே நாம் என்றும் இருக்கின்றோம்.*

*(வச.-2/65) பக.: தேக திருஷ்டியில் தேச கால வேற்றுமைகள் காணப்படுகின்றன. இந்தியாவில் நீ இருக்கின்றாயோ, அல்லது இந்தியா உனக்குள் இருக்கிறதா? உண்மையில் இந்தியாவும் பிற யாவும் உனக்குள்ளேயே இருக்கிறது. தூக்கத்தில் ஐரோப்பா, இந்தியா ஒன்றும் இல்லை. ஆயினும் நாம் இருந்து கொண்டே இருக்கிறோம். தேச காலங்கள் யாவும்*

*நமக்குள்ளே அடக்கம். உடல் தேச காலங்களுக்கு உட்பட்டு இருக்கிறது. நாம் அவற்றால் வரையறாது இருக்கிறோம்.*

*(ர.ம.பொ.-56)* பக.: *நாம் ஒரு ஜீவன் என்றும், நமக்கு வெளியே உலகமொன்று இருப்பதாகவும், அதற்கும் எதற்கும் அப்பால் கடவுள் இருக்கிறார் என்றும் கருதுகிறோம். இந்த பேதபாவம் ஒழியவேண்டும். நமக்கும் உலகிற்கும் வேறாகக் கடவுள் எங்கேயோ இல்லை.*


*எல்லா உயிர்களின் உளத்திலுமிலகும் ஆத்மஸ்வரூபம் நானே. படைப்புகள் அனைத்தின் அடி நடு முடிவெல்லாம் நானே என்று கீதையில் கூறப்பட்டுள்ளது. கடவுள் எல்லோர் உள்ளத்தும் இருக்கிறார்; எல்லோரின் ஆதாரமும், மூலமும், இருப்பிடமும், முடிவும் அவரே. அவரிடமே அனைத்தின் உற்பத்தி ஸ்திதிலயங்கள் யாவும். ஆதலின், கடவுள் எங்கேயோ தனியே இல்லை.*

*(அனுதின.-102)* பக.: *வழிபடும் ஒருவனும், வழிபாட்டை ஏற்கும் ஒருவனும் இருக்கிறார்களா? 'நான்' எனும் வழிபடுபவனைக் கண்டுபிடி. அதுவே உத்தமமான வழி. எப்போதும் காண்பவனைக் கண்டுபிடிக்க வேண்டும்.*

*(ர.ம.பொ.-121-123)* கே.: *கஷ்டப்படும் உலகத்தார்க்கு நான் உபகாரம் செய்ய வேண்டியதில்லையா?*

பக.: *உன்னைப் படைத்த சக்தியே உலகத்தையும் படைத்தது. உன்னைக் காப்பாற்றும் அந்த மகாசக்தி அவ்வாறே உலகத்தையும் காப்பாற்றும். கடவுளே உலகத்தையும் சிருஷ்டித்திருப்பதால் அதைக் காப்பாற்றுவதும் அவர் பொறுப்பு; உன் வேலையன்று.*

*ஞானம் அல்லது மெய்ம்மை என்ற நோக்கில் உலகமே ஓர் கனவு என்கிறபோது நீங்கள் கூறிய வேதனை நிகழ்வும் நிச்சயமாக ஓர் கனவே ஆகும்.*



மெய்யறிவு தோன்றி, அவ்வாறு இந்த மனமயக்கமான, புலன்களால் உணரத்தக்க அசாதாரண உலகினின்றும் விழித்தெழுகிற வரையில் பிறர் துன்பங்களைத் துடைக்க சமூச சேவை செய்து வரத்தான் வேண்டும். இருந்தும், அவ்வாறான சேவையை அகங்காரம் அற்றுப் புரிதல் வேண்டும் - அதாவது, இதைச் செய்பவன் நான் தான் என்ற ஆணவமற்றுச் செயலாற்ற வேண்டும். மாறாக, நான் கடவுளின் கைப்பாவையே அன்றி வேறல்ல என்கிற உணர்வு மேலோங்க வேண்டும். அதேபோன்று, எனக்குக் கீழ்ப்பட்ட ஒருவனுக்கு நான் உதவி செய்கிறேன்; அவனுக்கு உதவி தேவைப்படுகிறது; நான் உதவி புரியும் நிலையில் உளேன். நான் உயர்ந்தவன், அவனோ தாழ்ந்தவன் என்பதான தற்பெருமை பாராட்டலாகாது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்கிற மனப்பான்மை ஓங்கவேண்டும். அவ்வாறான பணிகள் யாவும் ஆன்ம சேவையே ஆகும்; வேறு யாருக்கோ செய்யும் சேவை அல்ல அது. யாருக்கோ உதவவில்லை. நீங்கள் உங்களுக்கே உதவி செய்து கொள்கிறீர்கள்.

# தாயும் ஆன தயாபரன்

**கௌதமன்**

ஆசையைக் குறித்துச் சற்று விரிவாகச் சிந்தனை செய்தோம். ஆசையைப் பூர்த்தி செய்யாமல் இருக்கும் வரை அது உள்ளத்தைக் கறையான் அரிப்பதுபோல் அரித்துக் கொண்டே இருக்கிறது. ஆசையைப் பூர்த்தி செய்து விட்டால் அது மறைந்து விடும். இனித் தொந்தரவு செய்யாது என்று நினைப்பது எவ்வளவு பெரிய தவறு என்பதையும் உணர்ந்து கொண்டோம். நிறைவேறிய ஆசையிலிருந்து அதைவிடப் பெரியதோர் ஆசை பிறக்கிறது. இதை உடனே நிறைவேற்றியே ஆக வேண்டும் என்ற அவசரநிலை தோன்றி விடுகிறது! ஆசை என்பது எத்தனை தீயது என்பதை எல்லாத் தத்துவ ஞானிகளும் அழுத்தமாகக் கூறியிருக்கிறார்கள்.

சம்சார வாழ்க்கையில் நம்மை நிலைநிறுத்தி மெய்ஞானத்தை நாம் அடைய விடாமல் தடுத்து நிற்பது ஆசைக்கும் தாயாகிய அகந்தையே. தத்துவ ஞானிகள் எல்லோரும் ஒருமுகமாகக் கண்டனம் செய்வது மனிதனின் இந்த அகந்தை என்ற தன்மையையே. இவ்வளவு தூஷணைக்கு இலக்கான இந்தத் தன்மையை ஈசன் நம்முள்ளே பொருத்தி வைக்கக் காரணம் என்ன?

அகந்தை என்பது வடசொல்; 'அகம்' என்றால் நான்; தா என்பது அதை உணரும் நிலையைக் காட்டும் சொல். 'அகந்தா' என்றால், நான் என்று உணர்ந்திருக்கும் மனநிலை. இதற்கு இன்னொரு பெயர் 'அகங்காரம்'. நான் என்று உணர்பவர் 'எனக்கு' என்றும் உணர்ந்து பண்டங்களைத் தேடி அடைவர். இதற்கு மமகாரம் என்பர். 'மம' என்ற வடசொல்லின் பொருள் என்னுடைய, எனது என்பதாகும். மனிதன் உலகில் தன் உடமைகளாகப்

பாராட்டும் சொத்துக்கள் அனைத்தும் இந்த மமகாரத்தின் விளைவேயாகும். மற்றும் மனைவி, குழந்தைகள், இவன் படைத்த கலைப்பொருட்கள், இவன் பிறந்த ஊர் எல்லாமே இந்த மமகாரத்தால் குறிக்கப்படுவன ஆகும்.

மனிதன் விலங்குகளிலிருந்து முதிர்ச்சி அடைந்து முன்னேறி வந்தவன். இந்த முன்னேற்றம் முன்னும் நடந்து கொண்டே இருக்கிறது. விலங்குகளின் மூளை அமைப்பை முன்னேற்றமடைந்த மனிதனிடத்தும் ஈசன் அமைத்து விட்டார். ஆனால் நாகரிகம், பண்பாடு இவற்றில் மனிதன் முன்னேற்றம் பெறுவதற்கு உயர்ந்த எண்ணங்கள், பரந்த நோக்கு, இவைகளைப் படைத்துத் தர ஓர் உயர்ந்த மூளையையும் ஈசன் மனிதனுக்கு வழங்கினார்.

இந்த உயர்ந்த மூளையும் காலத்தால் மெல்ல மெல்ல முதிர்ச்சியும் வளர்ச்சியும் பெற்று வந்திருக்கிறது. சமயக் கொள்கைகள், நீதிக் கட்டுப்பாடுகள் இவை பிறந்து வளர்வதெல்லாம் இந்த மூளையில்தான். இது செய்யத் தக்கது. இது எத்தனை லாபத்தை ஈட்டிக் கொடுத்தாலும் என்னால் செய்யத் தகாதது - என்ற பாகுபாட்டை வகுத்துத் தருவது இந்தப் பக்திதான். அறத்தின் காவலாளி என்று இதனை அழைக்கும் அளவுக்கு இது முறை தவறாது பணியாற்றுகிறது.

இந்த மூளைப் பகுதியின் முனைப்பு அறத்தின்மேல் உறுதியாக இருப்பினும் ஏன் மனிதன் கொடிய தவறுகளைச் செய்து கொண்டே போகிறான் என்பதுதான் வாசகர்களின் மனத்தில் எழுகின்ற கேள்வி. இதற்கு விடை - நாம் விலங்கு மனத்தின் தூண்டுதல்களுக்கு இடம் கொடுத்துப் பழகி விட்டதேயாகும். இந்தக் கீழ் மனத்தைக் கடக்க முயலும் மேல் மனம் (புதிய மூளை என்று முன்பு குறிக்கப்பட்டது) பலவீனமடைந்து தளர்ந்து விடுகிறது. தவிரவும் இயற்கையின் படைப்பில் உடலின் பகுதிகள் எல்லாம் விலங்கு மனத்தோடு மட்டுமே நரம்புகளால் இணைக்கப்பட்டுள்ளன. ஆகவே மேல்மனம் தன் எதிர்ப்பைக் கீழ் மனத்துக்குக் கற்பிக்கத்

*தான் இயலுமே தவிர, தன் கொள்கைகளை நேரடியாக அங்கங்களுக்கு அறிவித்து அவற்றை இயக்கத் திறமை யற்றதாகி விட்டது.*

*இப்படி ஏன் படைக்கப்பட்டோம் என்றால் விலங்குக ளிடையே உணவு முதலியவற்றுக்குப் பெரும் போட்டி இருந்து வந்தால் 'நான் வாழ வேண்டும்!' என்ற முனைப்பே தலைமையாகி விட்டது; தன்னைக் காத்துக் கொள்ள என்ன வேண்டுமோ ஏதும் செய்யலாம் என்ற உணர்வே அழுத்தம் பெற்றுவிட்டது. இதே முனைப்பு மனிதனிடத்தில் கீழ் மனத்தில் தலைமை பெற்றிருப்ப தாலும், அறத்தில் பற்றுள்ள மேல் மனத்துக்கு அதை அடக்குந் திறமை இல்லாததாலும் மனிதன் 'நான் வாழ வேண்டும்! எனக்கே எல்லாம் கிடைக்க வேண்டும்!' என்ற எண்ணங்களை விடாமல் பிடித்துக் கொண்டு வாழ்கிறான். அகங்கார மமகாரங்களுக்குத் தலைமை தோன்றி நிலைபெற்றது இக்காரணத்தால்தான்.*

*தாயுமானார்க்கு மனிதனின் மூளையில் உள்ள இந்தப் பிரிவுகள் - தற்கால விஞ்ஞானிகள் கண்டுபிடித்த புதிய விஷயங்கள் தெரிந்திருக்க முடியாது. அதனால்தான் 'பன்மாலை' என்ற பாடலில்,*

***நான்நான்இங்கு எனும்அகந்தை எனக்குஏன் வைத்தாய்***
***நல்வினைதீ வினைஎனவே நடுவே நாட்டி***
***ஊனாரும் உடற்சுமைஎன் மீதுஏன் வைத்தாய்***
***உயிர்எனவும் என்னையொன்றா உள்ளேன் வைத்தாய்***
***(பன்மாலை, 5)***

*என்று இறைவனைக் கேட்கிறார். ஆனால் உள்ளே வைக்கப்பட்ட நான், நான் என்ற பிசாசுக்கு முடிவான ஓர் நீக்கத்துக்கு வழி செய்தவன் இறைவனே என்பதை 'வம்பனேன்' என்ற பாடலில் காட்டுவார்.*

***..... நான் தோன்றா வாறுஉள்***
***உறையிலே உணர்த்தி மோன வொண்சுடர் வைவாள் தந்த***
***இறைவனே உனைப்பி ரிந்துஇங்கு இருக்கிலேன் இருக்கி லேனே.***
***(வம்பனேன், 2)***

மனிதன் உள்ளத்தில் இந்த அகங்கார மமகாரங்கள் தோன்றி வளர்ச்சி பெற்றிருப்பது எல்லோர்க்கும் தெரிந்த ஒன்றே. தாயுமானாரைப் போன்ற ஞானப் பெட்டகங்களுக்கு இறையருளால் இந்த 'நான் எனது' என்ற உணர்ச்சிகளோடு போரிட்டு அடக்கியாளும் திறன் பிறந்து விடுகிறது.

போரிட்டு 'நான், எனது' என்ற எண்ணங்களை அடக்கி ஆள்வதற்கு, முதற்கண் இந்த எண்ணங்கள் பொய்யானவை என்ற உறுதி, மனத்தில் பிறக்க வேண்டும். இதுவே இந்தப் போருக்கு முதற்படி. 'தன்னையொருவர்' என்ற பாடலில் தாயுமானார்,

எனதுஎன் பதும்பொய் யான்எனல்பொய்
எல்லாம் இறந்த இடங்காட்டும்
நினதுஎன் பதும்பொய் நீஎனல்பொய்
நிற்கும் நிலைக்கே நேசித்தேன்
மனதுஎன் பதுமோ என்வசமாய்
வாராது ஐய நின்அருளோ
தனதுஎன் பதுக்கும் இடங்காணேன்
தமியேன் எவ்வாறு உய்வேனே.

(தன்னையொருவர், 5)

அகங்கார மமகாரங்களை எல்லாம் பொய் என்று விலக்கி உள்ளத்தில் இறைவனையே நிலைநிறுத்தும் அளவுக்கு ஆன்ம நெறியில் முன்னேற்றம் பெற்ற தாயுமானார் அவரது நூல்களில் பல இடங்களில் இந்த இடையூறுகளைப் பற்றிக் குறிப்பிடுவார். இவற்றின் மீது அவருக்கு இருந்த சினத்தைச் சில இடங்களில் வெளிக் காட்டுவார். 'ஆசையெனும்' என்ற பாடலில் "யான் எனும் குதர்க்கம்" என்று நிந்தனை செய்வார்.

அகந்தை குறித்துத் தாயுமானாரும் பிறரும் கூறியுள்ள அருமையான பல கருத்துக்களை அடுத்த இதழில் காண்போம்.

# நீல வானில் இரு வெண்முகில்கள்

**சு. பரமேஸ்வரன்**

## *கனிவிக்க வந்த கனி - கனிந்தகனி*

தாயுமானாரின் பாடல்களில் ஆதாரசுருதியாக இருப்பது மோனநிலை பற்றியதே. மனதின் செயல்பற்றி 400க்கும் மேற்பட்ட இடங்களிலும், மோனத்தைப் பற்றி 210 இடங்களிலும் கூறியுள்ளார். ஏனெனில், சுகங்களுக் கெல்லாம் தலையாய சுகம் "சும்மா இருப்பதுவே". இதையே வேதங்களும் பறைசாற்றுகின்றன.

"சும்மா இருக்கச் சுகம்சுகம் என்று
சுருதியெல்லாம் அம்மா நிரந்தரம் சொல்லவும்"....

என்பார்.

இந்த மோன நிலையானது எளிதில் யாருக்கும் கிட்டாது. ஜீவபேதம் அற்று, உடம்பின் வாசனையற்ற நிலை. இந்நிலையில் இன்ப, துன்ப நுகர்ச்சி இல்லை. இதனை ஆண்டவனிடத்து - சற்குருவிடம் சரணாகதி யடைந்து, யாசித்துப் பெற வேண்டும் என்பதை,

"கண்மூடி மௌனியாகத் தனியே
இருப்பதற்கு எண்ணினேன், சாமி அறியாததோ"....

என்பார்.

மேலை நாட்டவருக்கும், கீழை நாட்டவருக்கும், ஞானகுருவாக விளங்கிவரும் ரமணரின் உபதேசம் மோனமொழியே. உலகில் உள்ள எல்லா மொழிகளுக்கும் தாய்மொழி மோனமே! பிறருக்கு அறிவுறுத்த ஞானியின் ஆத்மானுபூதியே போதுமானது. அவர் எப்போதும் மவுனமாகவே இருக்கிறார். அவரது சந்நிதியில் அருள்வெள்ளம் எல்லோரிடமும் பாய்கிறது. கேள்வி கேட்ட வந்தவரது உள்ளத்திலேயே விடைகிடைப்பதும்,

மனம் அமைதியுற்று சாந்தியைப் பெறுவதும் பலருடைய அனுபவமாகவே இன்றுவரை நடந்து வருகிறது.

ரமணர் கூறுவார், தானம், தவம், பூஜை என அனைத்தும் செய்வது ஞானம் பெறுதற்கே. எல்லாச் சாதனைகளும், சமயங்களும் முடிவில் அடைய வேண்டியது மோனமே.

## மோனம் என்பது ஞானவரம்பு

தங்கத்தின் மாற்று அறிவதற்கு உரைகல் இருக்கிறது. தங்கத்தை உரைத்துப் பார்த்துப் பின்பு மதிப்பிடுவார்கள். நாகரீக உலகில், போலி குருமார்கள், தங்களை ஞானிகள் எனக் கூறிக் கொள்பவர்கள் நிறைய பேர் உண்டு. இவர்களை இனம் காணத் தாயுமானாரின் அழகிய பாடல் ஒன்று உண்டு. இதில் ஒரு மெய்ஞ்ஞானியின் சந்நிதி எவ்வாறு இருக்கும் என மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்.

கானகம் இலங்குபுலி பசுவொடு குலாவும்நின்
கண்காண மதயானைநீ
கைகாட்ட வுங்கையால் நெகிடிக் கெனப்பெரிய
கட்டைமிக ஏந்திவருமே
போனகம் அமைந்ததென அக்காம தேனுநின்
பொன்னடியில் நின்றுசொலுமே
புவிராசர் கவிராசர் தவராச ரென்றுனைப்
போற்றிசய போற்றிஎன்பார்
ஞானகரு ணாகர முகங்கண்ட போதிலே
நவநாத சித்தர்களும்உன்
நட்பினை விரும்புவார் சுகர்வாம தேவர்முதல்
ஞானிகளும் உனைமெச்சுவார்
வானகமும் மண்ணகமும் வந்தெதிர் வணங்கிடும்உன்
மகிமையது சொல்லஎளிதோ
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

- மௌனகுரு வணக்கம், 7

பாடலின் பொருள்: புலியும், பசுவும் பகைமை மறந்து உலாவுமாம், மதயானையும் குளிர் காய்வதற்கு பெரிய

*கட்டையை ஏந்தி வருமாம், காமதேனு எனும் பசுவும் வந்து சொல்லுமாம், பண்டிதர்களும், அரசர்களும், யோகியரும் போற்றிப் புகழும் உன் மகிமையைச் சொல்வது கடினம் என்றார்.*

*அருணையில் ரமணரது 54 ஆண்டுக் கால வாழ்வின் பிரதிபலிப்பும் இதுவே. மனிதர்கள் மட்டுமின்றிப் புலியும், பசுவும், பாம்பும், குரங்கும், அணில், மயில், மான், காகம், நாய் என எல்லா ஜீவராசிகளுமே அவரிடம் அன்பு பூண்டு பகைமை மறந்து அவரது சந்நிதியில் ஓடித்திரிந்தன. அது மட்டுமா அஃறிணை உயிராகிய ஒரு பசு, காகம், நாய், மான் என ரமணரின் ஸ்பரிச தீட்சையால் முக்திபெற்று, அவைகளுக்கும் சமாதி பிரதிஷ்டை செய்து ரமண ஆச்ரமத்தில் வைக்கப்பட்டிருப்பது எங்குமே காணாத ஓர் அற்புதம்.*

## *"அஞ்ஞானம் போயிற்று என்று உந்தீபற ஆனந்தம் கண்டோம் என்று உந்தீபற"*

*ஞானம் என்பது மன அறிவு அன்று. அறியாமையும் கடந்தது. இதை, தாயுமானார் ஒரு உவமையோடு கூறுவார். கிராமங்களில், ஆடோ, மாடோ காணாமல் போனால் பூசாரியிடம் குறிகேட்பார்கள். அவர் மை (அஞ்சனம்) போட்டுப் பார்ப்பார். அதுபோல மெய்ப்பொருளைக் காண ஞானம் எனும் மை வேண்டும் என்பார்.*

*ஈனமில்லா மெய்ப்பொருளை இம்மையிலே காணவெளி*
*ஞானமெனும் அஞ்சனத்தை நான்பெறுவ தெந்நாளோ.*

*இதைவிடுத்து, யோகம் என்ற பெயரில் மூச்சைப் பிடிப்பது குழிவெட்டி அதில் சமாதி இருப்பது எல்லாம் அவயோகம் என்பதை,*

*சும்மா இருக்கச் சுகமுதய மாகுமே*
*இம்மாயா யோகமினி ஏனடா - தம்மறிவின்*
*சுட்டாலே யாகுமோ சொல்லவேண் டாங்கன்ம*
*நிட்டா சிறுபிள்ளாய் நீ.*

*என்பார்.*

மனமானது, எந்த நேரமும் ஓய்வின்றி சலித்துக் கொண்டே இருப்பது அதன் இயல்பு. பலகோடி எண்ணங்களை எண்ணி, எண்ணித் துயர் உறுகிறது.

"எண்ணம் எண்ணம் எலாம் எண்ணி எண்ணி ஏழைநெஞ்சம்
புண் ஆகச் செய்தது இனிப்போதும் பராபரமே"

என்றார்.

மனதை தியானத்தால் ஒருமுகப் படுத்தல் வேண்டும். இதனை வசப்படுத்துவதாலேயே சாந்தி உண்டாகும்.

"மனம் என்பது ஆத்மசொரூபத்தில் உள்ள ஓர் அதிசய சக்தி. இது சகல நினைவுகளையும் தோற்றுவிக்கிறது. நினைவே மனதின் சொரூபம். சர்வ அறிவிற்கும், சகல தொழில்களுக்கும் காரணமான மனம் அடங்கினால் ஜகதிருஷ்டி நீங்கும். பிராணாயாமம், மூர்த்தி தியானம், மந்திர ஜபம், கோயில் வழிபாடு எல்லாம் மனதை அடக்கும் சகாயங்களே" - இது ரமணர் வாக்கு. தான் அந்தம் ஆன இடம் ஆனந்தமாம்.

பகவான் ரமணர் சந்நிதியில் ஞானதாகத்துடன் அன்பர்கள் கேட்கும் வினாக்களுக்கு, தாயுமானவரின் பாடல்களிலிருந்தே பெரும்பாலும் மேற்கோள் காட்டுவார். அவரது பாடல்களைப் படிக்கும் போது மிகவும் உணர்ச்சி வசப்பட்டு, கண்களில் நீர் பெருகும். ஒரு ஞானியை இன்னொரு ஞானியே அறிவார்.

ஒரு சமயம் இளைஞர் ஒருவர் விவேகானந்தர் புத்தகத்தில் தாம் நிர்விகல்ப சமாதி அனுபவம் பெற்றதை, அது ஒரு பயங்கர அனுபவம் (Terrible Experience) என்று வர்ணித்துள்ளாரே? என்று வினவ,

அதெல்லாம் ஏதோ சொல்வதுதான். ஒவ்வொருவரும் தமது மனதிற்குத் தோன்றியதை எழுதுவார்கள். மனம், வாக்குக்கு அப்பாற்பட்டதை அப்படி என்றும், இப்படி என்றும் சொல்வதெல்லாம் தவறுதான். ஏதோ ஓரளவு சொல்வதானால் தாயுமானாரின் பாடலைத்தான் பார்க்கணும்

எனக்கூறிஅருகிலிருந்ததாயுமானாரின்பாடல்திரட்டிலிருந்து சின்மயானந்த குரு - பாடல் 8 வசித்துக் காண்பித்தார்.

கூடுதல் உடன்பிரிதல் அற்றுநிர்த் தொந்தமாய்க்
குவிதலுடன் விரிதல்அற்றுக்
குணம்அற்று வரவினொடு போக்கும்அற்று நிலையான
குறியற்று மலமும்அற்று
நாடுதலும் அற்றுமேல் கீழ்நடுப் பக்கமென
நண்ணுதலும் அற்றுவிந்து
நாதம்அற்று ஐவகைப் பூத பேதமற்று
ஞாதுருவின் ஞானம்அற்று
வாடுதலும் அற்றுமேல் ஒன்றற்று இரண்டற்று
வாக்குஅற்று மனமும்அற்று
மன்னுபரி பூரணச் சுகவாரி தன்னிலே
வாய்மடுத்து உண்டுஅவசமாய்த்
தேடுதலும்அற்றஇடம் நிலைஎன்ற மௌனியே
சித்தாந்த முக்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயானந்த குருவே!

இப்பாடல் மனனம் செய்து நாளும் ஓதவேண்டிய அற்புதமான பாடலாகும்.

## உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்

தாயுமானாரின் பாடல்களில் ஒருசொல் என்பது அடிக்கடி வரும்.

"ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக 'ஒருசொல்' விளம்பினர்யார்?

என்றும்,

"எனக்கு ஐயநீ சொன்ன ஒரு வார்த்தையினை
மலை இலக்கு என நம்பினேன்..."

என்றும்,

"பன்மார்க்கம் ஆனபல அடிபட்டேனும்
ஒரு சொல் மார்க்கம் கண்டு துலங்கு நாள் எந்நாளோ?" -

*என்ற பாடல்களில் வரும் “ஒரு சொல்” என்பதின் பொருள் யாது? என்று ஒரு அன்பர் வினவ,*

*அது சும்மா இரு என்பதாகவும், அதுவே அருணகிரியாருக்கு முருகப்பெருமான் உபதேசித்தது என்றும் சின்முத்திரையும் அதுவே எனக் குறிப்பிட்டார் ரமண மாமுனிவர்.*

*மற்றொரு நாள் வயதான பெண்மணி தான் எழுதிய கடிதத்தை ரமணரிடம் சமர்ப்பித்தார். அதைப் படித்த ரமணர், இது ஒரு புகார் பட்டியல் என்றார். நான் உங்களது தரிசனத்திற்குப் பலமுறை வந்து கொண்டு இருக்கிறேன். எனினும் எனது நிலையில் ஒரு முன்னேற்றமும் ஏற்பட வில்லை. நண்பர்களும், உறவினர்களும் என்னைப் பார்த்து நகைக்கிறார்கள் என்று பல குறைகளை எழுதியுள்ளார் எனக் கூறிவிட்டு அந்தப் பெண்மணியைக் கருணையுடன் நோக்கி, ஆறுதலாகக் கூறத் தொடங்கினார். ஞானம் அடையவில்லையே என்றோ வாசனைகள் ஒழியவில்லையோ என்று எண்ணி ஏன் வருந்துகிறீர்கள்? இத்தகைய எண்ணங்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது. ஆன்மிகத்தில் ஏற்படும் முன்னேற்றம் எளிதில் புலப்படாது. அந்த ஞானியும் இதையே தான் பாடியுள்ளார் என்றால் நீங்கள் வருந்துவது ஏன்? எனக் கூறிவிட்டு தாயுமானவரின் பாடலில் உள்ள சுகவாரி எனும் பகுதியைப் படித்துக் காண்பித்தார்.*

*எந்நாளும் உடலிலே உயிராம் உனைப்போல்*
*இருக்கவிலை யோமனதெனும்*
*யானுமென் நட்பாம் பிராணனும் எமைச்சடம*
*தென்றுனைச் சித்தென்றுமே*
*அந்நாளி லெவனோ பிரித்தான் அதைக்கேட்ட*
*அன்றுமுதல் இன்றுவரையும்*
*அநியாய மாயெமை யடக்கிக் குறுக்கே*
*அடர்ந்தரசு பண்ணிஎங்கள்*
*முன்னாக நீஎன்ன கோட்டைகொண் டாயென்று*
*மூடமன மிகவும்ஏச*

*மூண்டெரியும் அனலிட்ட மெழுகா யுளங்கருகல்*
*முறைமையோ பதினாயிரஞ்*
*சொன்னாலும் நின்னரு ளிரங்கவிலை யேஇனிச்*
*சுகம்வருவ தெப்படிசொலாய்*
*சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்*
*சோதியே சுகவாரியே.*

எளிமையான சொல், ஆழமான கருத்துள்ள இப்பாடலைப் படித்துப் படித்து இன்புற வேண்டும்.

## நெஞ்சகமே கோயில்

ரமண பகவானின் நூல்களையும், அவரது உரையாடல்களையும் உள்ளவாறு படித்தறிந்தவர்களுக்கு மட்டுமே அவர் எந்த அளவிற்கு ஞானியாகவும், சிறந்த பக்தனாகவும் திகழ்ந்தார் என்பது தெரியும். ஞானத்தாலும், பக்தியாலும் இறுதியில் அடைவது அகந்தையின் பூரண அழிவே. ஒருமுறை பக்தர் ஒருவர் இறைவனின் கருணை குறித்து வினவ, தாயுமானாரின் பாடல்களில் உள்ள “ஆகார புவனம்” எனும் பகுதியைப் படித்து விளக்கிக் கொண்டிருந்தார். அதில்,

*பாராதி விண்ணனைத்தும் நீயாச் சிந்தை*
*பரியமட லாவெழுதிப் பார்த்துப் பார்த்து*
*வாராயோ என்ப்ராண நாதா என்பேன்*
*வளைத்துவளைத் தெனைநீயா வைத்துக் கொண்டு*
*பூராய மாமேலொன் றறியா வண்ணம்*
*புண்ணாளர் போல்நெஞ்சம் புலம்பி யுள்ளே*
*நீராள மாயுருகிக் கண்ணீர் சோர*
*நெட்டுயிர்த்து மெய்ம்மறந்தோர் நிலையாய் நிற்பேன். 24.*

என்ற வரிகளைப் படிக்குங்கால் ரமணர் கண்களில் ஊற்றாகப் பெருக, தொண்டையடைத்து, குரல் தளுதளுத்தது. தொடர்ந்து படிக்க இயலாமல் புத்தகத்தைக் கீழே வைத்தார். சபையில் ஒரே அமைதி. அங்கு நிலவிய சாந்தியை யாவரும் உணர்ந்தனர். இதுபோல் பல சமயங்களில் நடப்பது உண்டு.

பக்தியின் உன்னத நிலை என்பது, கண்டனவெல்லாம் இறைவன் திருவடிவமே என்று உணர்வது, இறைவனை "ஆனந்த வடிவு' என்றும்,

"ஏது பாவித்திடினும், அதுவாகி வந்தருள் செய் எந்தை நீ!" எனவும் கூறுவார் தாயுமானவர்.

அகப்பூஜை செய்தலே இறைவனுக்கு மிகவும் உயர்ந்தது என்பதை,

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்

அன்பே மஞ்சன நீர், பூஜை கொள்ள வாராய் பராபரமே.

என்றார்.

பாமர மக்கள், துஷ்ட தேவதைக்கு உயிர்ப்பலி கொடுத்து வழிபடுவர். ஆனால் தாயுமானவரோ சாந்த மூர்த்தியான துரிய தெய்வத்திற்கு எதைக் கொடுக்கிறார் என்றால், துள்ளித் திரியும் மனமாகிய ஆட்டைப் பலி கொடுத்து விட்டால் கர்மம் என்ற துஷ்ட தேவதையின் தொல்லை நீங்குமாம். மேலும் அன்பு அபிஷேக நீர், ஆவி நைவேத்தியம் அறிவும், பிராணனும், தூய தீபங்களாகும். இப்படிச் செய்வது ஒரு காலமோ இருகாலமோ அல்லாமல், சதா கால பூஜையாம். இந்தப் பாடலைப் பார்க்கும்போதே, உடல் குழைய, மனம் நெகிழ்ந்து உருகுவது போன்று உணர்ச்சி ஏற்படுவது உறுதி. பார்க்கின்ற மலர்கள் தோறும் இறைவனின் உருவம் தெரிய, அவற்றைப் பரிக்கவும் மனம் ஒப்ப வில்லையாம். பக்தியின் மிக உயர்ந்த நிலை ஆத்ம பூஜை எனப்படும்.

தெய்வ மணம் கமழும் இப்பாடல் நாளும் ஓதி மகிழ்வோம்.

துள்ளுமறி யாமனது பலிகொடுத் தேன்கர்ம
    துட்டதே வதைகளில்லை
துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே
    தொழும்பன்அன் பபிடேகநீர்

*உள்ளுறையி லென்னாவி நைவேத்தி யம்ப்ராணன்*
*ஓங்குமதி தூபதீபம்*
*ஒருகால மன்றிது சதாகால பூசையா*
*ஒப்புவித் தேன்கருணைகூர்*
*தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே*
*தெளிந்ததே னேசீனியே*
*திவ்யரச மியாவுந் திரண்டொழுகு பாகே*
*தெவிட்டாத ஆனந்தமே*
*கள்ளன்அறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்*
*கலக்கவரு நல்லஉறவே*
*கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு*
*கருணா கரக்கடவுளே.* *(கருணாகரக் கடவுள், 8)*

## *சாட்டையில் பம்பரஜாலம்*

*ரமண சந்நிதியில் அடிக்கடி கேட்கப்படும் கேள்வி ஒன்று துறவு பற்றியது. ஆத்ம சாதனை செய்யக் குடும்பத்தைத் துறக்க வேண்டுமா? தனிமையை நாடிச் செல்ல வேண்டுமா? என்பது. இதற்கு அவர் எப்போதும் கூறும் பதில்:*

*துறவு என்பது மனதைப் பற்றியது. அது சூழ்நிலையையோ, வெளி விஷயங்களைப் பற்றியது அல்ல. ஒரு குடும்பஸ்தன் எந்தத் தொழிலைச் செய்து கொண்டு இருந்தாலும், மனதில் பற்றில்லாமல் இருக்கலாம். மற்றொருவன் காட்டில் இருந்து கொண்டு புறத்தில் விட்டவைகளை நினைத்துக் கொண்டு இருந்தால், நீ காட்டிற்குச் செல்வதால் என் பயன்? குடும்பத்தையும், தொழிலையும் விட்டு விடலாம். ஆனால் உனது மனம் உன் கூடவே வருமே! நான் துறவி என்று நினைக்கிறாய். ஆத்ம சாதனைக்கும் புறத்தில் உள்ள எதுவும் தடைகிடையாது. மனத்துறவே முக்கியம் என்பார்.*

*இதனையே தாயுமானவரும்,*

சாட்டையிற் பம்பர சாலம் போல்எலாம்
ஆட்டுவான் இறையென அறிந்து நெஞ்சமே
தேட்டமொன் றறஅருட் செயலில் நிற்றியேல்
வீட்டறந் துறவறம் இரண்டும் மேன்மையே.

மேலும்,

அந்தக் கரணம் அடங்கத் துறப்பதுவே
எந்தத் துறவினும்நன் றெந்தாய் பராபரமே

என்பார்.

## மூர்த்தி எல்லாம் வழி, எங்கள் மோன குருவாழி

நமது முன்னோர்கள் செய்த எத்தவத்தாலோ பகவான் ஸ்ரீ ரமணர், தாயுமானவர் ஆகிய இருவரும் உலக உயிர்களின் மீது பெருங்கருணை கொண்டு, ஆத்ம வித்தையை யாவரும் உணரும்பொருட்டு மண்ணாய்ப் போகும் மனித உடல் தாங்கி, இப்புண்ணிய தமிழ் மண்ணிலே சாதாரண மனிதனைப் போல் வாழ்ந்து காட்டிய பிரமஞானியர் ஆவர். ரமணர் தன்னைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னது ஏதோ ஒரு சில சமயங்களில்தான். தான் கடவுளின் அம்சம் என்றோ எந்த ஒரு அவதார புருஷர் என்றோ ஒருபோதும் கூறியதில்லை. ஆச்ரம சம்பந்தப்பட்ட ஒரு வழக்கை விசாரிக்க வந்த கோர்ட்டார் கேட்ட கேள்விக்கு, தன்னைப் பற்றிய உண்மையை வெளிப்படையாகச் சொன்னது அந்த ஒரு முறை மட்டுமே.

நீதிபதி: உங்களைப்போல் அதிவர்ணாஸ்ரமி நீங்கள் இருக்கும் நிலையில் தற்சமயம் யாராவது இருக்கிறார்களா?

ஸ்ரீபகவான்: இல்லை.

கேள்வி: முன்பு யாராவது இருந்திருக்கிறார்களா?

பதில்: ஆம்.

கேள்வி: யார்?

பதில்: சுகர், ஜனகர், ஜடபரதர், வாமதேவர்.

*தாயுமானவரும் இவர்களைப் பற்றி மிகவும் உயர்வாகக் கூறியிருப்பது நமக்கு வியப்பளிக்கும் செய்தியாகும்.*

*ஆகார புவனம் என்ற பதிகத்தில் 23-ஆம் பாடலில் சனகாதி முனிவர்களான இறை அருள் பெற்ற நால்வரையும், சுகர், ஜனகன், வாமதேவர் போன்ற ஞானிகளைப் போற்றிப் புகழ்ந்துள்ளதை இங்கு நினைவில் கொள்ளுதல் நலம். சுகர் வியாசருடைய மகன். இவர் பிறந்தது முதலே முழுத்துறவுடன் ஞானியாக இருந்தமையால் முனிவர்களுள் மிகச் சிறந்தவராகக் கருதப்படுகிறார். மாதர் வசப்படாதவர். ஜனகன் ஞானியாகவும், அரசனாகவும் இருந்தவர். ஜடபரதர் பாமரனைப்போல் வாழ்ந்தவர்.*

*சுகர், மார்க்கண்டர் முதலியோர் சாகாவரம் பெற்ற நித்தியர் என்பார்.*

*திவ்யகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள்*
*சித்தாந்த நித்யரலரோ"*

*"ஓதரிய சுகர்போல ஏன்ஏன் என்ன*
*ஒருவர்இல்லை யோஎனவும் உரைப்பேன் தானே"*

*என்பார்.*

*பக்தி, ஞானம், வைராக்கியம் முதலியவற்றை இந்தத் தமிழ் மண்ணில் ஊன்றிப் பரவச்செய்த இவர்களது வாழ்க்கை வரலாறு, பனுவல்களை அனைவராலும் போற்றிப் படிக்கத் தக்கது. இருள் மண்டிய இதயங்களில் ஞான ஒளி ஏற்றிவைக்க வந்த ஞான வள்ளல்களான தாயுமானவர், ரமணரது பொன்னார் திருவடிகளே சிரமேறிக் கொண்டு பாடி மகிழ்வோம்.!!*

***"ஞான நெறிக்கு ஏற்றகுரு; நண்ணரிய சித்திமுத்தி***
***தானம், தருமம் தழைத்தகுரு; மானமொடு***
***தாய் எனவும், வந்து என்னைத் தந்தகுரு, என் சிந்தை***
***கோயில் என வாழுங்குரு."***

# மோன சன்னிதியின் மகிமை

**வி. நிரஞ்சன்**

சொரூபானந்தர் ஞானகுரு; தத்துவராயர் அவரது சற்சீடர். குருவின் மோன சன்னிதியில் கண நேரத்தில் தத்துவராயர் மெய்ஞானசித்தி பெற்றார். கிடைத்தற்கு அரிய இப்பேறு தன் தவ வலிமையினாலோ, மனத் தூய்மையினாலோ, பரிபக்குவத்தினாலோ கிட்ட வில்லை, முழுதும் குருவின் அருள் வல்லமையாலும், கருணையினாலும், மோனசன்னிதியின் ஆற்றலாலும் தான் என்று உணர்கின்றார். காற்றிற்குச் சமமாக சதா சலித்துக்கொண்டிருக்கும் சித்தத்தை வலித்துக் கட்டிச் சித்தத்தைச் சித்தாக்கி நிறுத்தியது குருவருளே என்று தெளிந்து குருவின் பெருமையைப் போற்றி பரணி ஒன்று இயற்றினார்.

மறைநூல் வல்லவர்களின் முன்னிலையில் அவர் அப்பாடலை அரங்கேற்ற வேண்டினார். ஆயிரம் யானைகளைப் போர்க்களத்தில் கொன்று குவிக்கும் மாவீரனின் ஆற்றலைப் போற்றுமுகமாக இயற்றப்படும் பரணி என்னும் பாடல் வகை அசல வடிவினராய்ச் சித்தத்தின் சலனம் சற்றும் இன்றி அமர்ந்திருக்கும் அவரது குருவிற்கு ஏற்புடையது இல்லை என்று அவர்கள் மறுப்புத் தெரிவித்தனர். பரணி பாடப்படுவதற்கு தனது சற்குரு எல்லா வகையிலும் ஏற்றம் உடையவர் என்று மறுமொழி புகன்ற தத்துவராயர் தனது குருவின் மேன்மையை நேரில் கண்டு அறியுமாறு அம்

மறையோர்களுக்கு அழைப்பு விடுத்தார். அவர்களும் அவருடைய அழைப்பிற்கு இணங்கி சொரூபானந்தரின் சன்னிதி அடைந்தனர்.

அவர்களைக் கண்ணோக்கி சொருபானந்தர் மோன நிட்டையுற்றனர். உடனேயே அவர்களும் மனம் அடங்கப் பெற்று ஆன்ம நிட்டை உற்றனர். ஓரிரு நாட்கள் கழிந்து சொரூபானந்தர் மனத்தை சற்றே சலிப்பித்துப் புறமுகமானார்; அவர்களும் மனச்சலனம் உற்று புறமுகப்பட்டனர். அவர்களுடைய ஐயம் தெளிந்தது; எதிர்ப்பு நீங்கியது. உள்ளதை இல்லதாக்கி, இல்லதை உள்ளதாக்கி, எதற்கும் அடங்காது சலித்துக் கொண்டிருக்கும் அவர்கள் அனைவரது மனத்தையும் தனது மோன சன்னிதியின் மாத்திரத்தாலேயே கணத்தில் அடக்கி நெடுநேரம் உடல் மனம் கடந்த ஆன்ம இன்பக் கடலில் ஆழ்த்திய சொரூபானந்தரின் பேராற்றலுக்கு ஆயிரம் யானைகளைக் கொன்று குவித்த மாவீரனும் இணையில்லை என்று தயக்கம் ஏதும் இன்றிப் போற்றி தத்துவராயரின் பாடலுக்கு தங்களது முழுப் பாராட்டையும் தெரிவித்தனர். சொல் மானத கன்மாதி சிறிதின்றி உரம் பெறுகின்ற மோனசமாதியின் பெருமை குறித்த இந்த நிகழ்ச்சியை பகவான் நினைவு கூர்வது வழக்கம்

சொரூபானந்தரின் சன்னிதி போன்றதே பகவான் ரமணரின் சன்னிதியும். பல்லாயிரக்கணக்கான பக்குவிகள் அவரது சன்னிதியில் ஆன்ம வஸ்துவை, மெய்ப் பொருளை, உடல் மனம் கடந்து உணர்வாய் விளங்கக் கண்டனர். கண்டவன் என்றிடக் கருத்து எழாது நின்றுள்ளனர். மோனத்தின் ஆற்றல் குறித்தே எழுதப் பட்டு வரும் இக் கட்டுரைத் தொடரில் மேலும் சில அரிய நிகழ்ச்சிகளும் சொல்லப்பட இருக்கின்றன.

விருபாக்ஷ குகையில், துவக்க காலத்தில் பகவான் இருந்த சமயம். சிருங்கேரி சங்கர மடத்தில் இருந்து ஒரு

மறையவர் பகவானைத் தரிசித்துப் பேசிக் கொண்டிருந் தனர். பின்னர் அவர் பகவானிடம் ஒரு வேண்டுகோளைச் சமர்ப்பித்தார். ஐயனே, தங்களையும் என் குரு பாரம்பரியத்தில் சேர்த்துக் கொண்டு வழிபட விரும்புகின்றேன். தங்களின் உன்னத நிலையினை நன்கு அறிகின்றேன். தாங்கள் பிறந்தது அந்தணர் குடும்பத்தில். ஆதலின் முறைப்படி சன்னியாச தீக்ஷை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றேன். எங்களது மடத்திலிருந்து அதற்கான ஏற்பாடுகள் எல்லாவற்றையும் நான் செய்து கொள்கின்றேன். தாங்கள் மட்டும் சம்மதித்தால் போதும். நான் தங்களுக்கு தீக்ஷை அளித்துவிடுகின்றேன். தாங்கள் உடல் முழுவதும் காவித் துணி அணிய வேண்டியது இல்லை. இடைத்துணி மட்டும் காவி அணிந்தால் போதும். தங்களது சம்மதத்தை வேண்டி நான் மாலை திரும்பி வருகின்றேன், என்று சொல்லிவிட்டுச் சென்றனர்.

பகவானோ மௌனமாய் உட்கார்ந்து இருந்தனர். சற்று நேரத்தில் ஒரு வயோதிகர் ஒரு மூட்டை ஒன்றினைச் சுமந்து வந்தனர். பகவானைப் பார்த்து, இந்தக் கட்டினைச் சற்றே உங்கள் பொறுப்பில் விட்டுச் செல்கின்றேன். குளித்துவிட்டுத் திரும்பும் பொழுது இதை நான் எடுத்துக் கொள்கின்றேன். அது வரை இது உங்கள் பொறுப்பில் இருக்கட்டும், என்று கூறிவிட்டுச் சென்றார். அக் கட்டின் மேற்புறத்தில் சில நூல்கள் இருக்கக் கண்டார் பகவான். ஏதோ ஒரு சக்தி உந்த அவர் அந்த நூல்களைப் பார்ப்பதற்காக அக்கட்டினைப் பிரித்தார். முதலாவதாக அவரது கண்ணில் பட்டது ஒரு பாடல். வடமொழியில் அமைந்திருந்தது அந்தப் பாடல்.

பூரண உணர்வின் இறை வடிவாகிய சிவனார் அப் பாடலில் ஓர் உறுதிமொழி அளிக்கின்றனர்: அண்ணாமலை என்னும் இப் புனித தலத்தில் இருபத்து ஏழு மைல்கள் சுற்றளவில் வசிக்கும் மக்களுக்கு

சன்னியாசத்திற்கு உரிய தீக்ஷை முதலாம் கட்டுப்பாடுகள் ஏதும் இன்றியே உயிர் இறையோடு ஒன்றிவிடுகின்ற மெய் ஞான சித்தியினை நான் அளிக்கின்றேன். இது என் ஆணை, என்று அப்பாடலில் கண்டிருந்தது. சிருங்கேரி மறையவருக்கு உரிய பதில் அப்பாடலில் இருப்பதை அறிந்தனர் பகவான். உடனேயே அப்பாடலை அப்படியே எழுதிவைத்துக் கொண்டு அப்பெரியவரின் மூட்டையை மீண்டும் கட்டி வைத்தனர். பின்னர் வந்த சிருங்கேரி மறையவரிடம் இப்பாடலைக் காட்டினர். அவரும் சிவன் ஆணையால் அத் தல வாசர்க்குக் கிரமத் துறவு வேண்டியதில்லை என்னும் உறுதிமொழியைப் படித்து விட்டு, சொல்வதற்கு வேறு ஒன்றும் இன்றி அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

இந்நிகழ்ச்சியை அறிந்தார் அந்நாள் சிருங்கேரி மடத்தின் தலைவராய் விளங்கிய ஸ்ரீ சச்சிதானந்த சிவாபினவ நரசிம்ம பாரதி சுவாமிகள். சிருங்கேரி சங்கர மடத்தைச் சேர்ந்த ஒருவர் பகவானின் மேன்மையை அறியாது செய்த தவறுக்கு ஸ்ரீ நரசிம்மபாரதி சுவாமிகள் இரங்கியதோடு மட்டும் அல்லாமல் இனியும் அது போன்ற முயற்சிகளில் யாரும் ஈடுபடவேண்டாம் என்றும் கூறியதாகத் தெரிகின்றது. ஸ்ரீநரசிம்ம பாரதி சுவாமிகள் பகவானின் மேன்மையினை நன்கு அறிந்தவராய் இருந்தனர். தமிழ்நாட்டிலிருந்து பக்தர்கள் அவரைத் தரிசிக்கச் செல்கின்ற பொழுதெல்லாம் அவர் திருவண்ணாமலையில் வீற்றிருக்கும் பால யோகி ரமணரின் நலம் விசாரிப்பது உண்டு. சூரி நாகம்மாவின் கடிதங்களில் கண்ட குறிப்பின்படி ஸ்ரீநரசிம்ம பாரதி சுவாமிகள் பகவானைக் காண பல முறை முயற்சி செய்தனர் என்றும் ஆனால் அது நிகழவில்லை என்றும் பகவானே கூறுவதாய் அமைந்திருக்கின்றது.

இதை ஒட்டி ஒரு சுவையான நிகழ்ச்சி ஒன்று விசுவநாத சுவாமிகளால் விவரிக்கப்பட்டிருக்கின்றது. ஸ்ரீநரசிம்ம

பாரதி சுவாமிகள் நிட்டையின் பொருட்டு தனித்து இருந்த காலம். சிதம்பரத்தைச் சேர்ந்த வடமொழியில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்த இளைஞன் ஒருவன் சுவாமிகளை அணுகி அவரிடம் வேதாந்தம் கற்க வேண்டினான். அவனுடைய தீவிர ஆர்வத்தை கண்ட சுவாமிகள் அவனுக்காக வேதாந்தபாடத்தைக் கற்றுத்தர இசைந்தனர். அச் சமயம் ஒரு நாள் அவர் ஞானியரின் அதீத நிலையினைக் குறித்து விளக்கிக் கொண்டிருந்தனர். அப்போது அவர் கூறினார்: நாம் எல்லோரும் உப நிடதங்களைப் படிக்கின்றோம், விளக்க உரைகளைப் படிக்கின்றோம். இவை நமக்குத் தெளிவான அறிவைக் கொடுக்கின்றன, ஆன்மிகத்திற்கு உதவுகின்றன என்பதில் சந்தேகம் ஏதும் இல்லை. ஆனாலும் இது எல்லாம் இரண்டாம் தரம் தான். ஆன்மிகத்திற்கு வேண்டுவது அதி தீவிர பக்குவம். ஒருவன் அதி தீவிர பக்குவியாக இருந்தால் இந்நூலறிவு பெற்றாக வேண்டும் என்கின்ற கட்டாயமே இல்லை. அவனுக்குக் கண நேரத்தில் சொரூப தரிசனம் கிட்டிவிடும். இதற்கு திருவண்ணா மலையின் பாலயோகி ஒரு சிறந்த எடுத்துக் காட்டு.

இதை கேட்ட அந்த இளைஞன் பெரும் வியப்பில் ஆழ்ந்தனன். காரணம், பகவானது உயர்ந்த ஆன்ம நிலையினைப் பற்றிக் கேள்விப்பட்டும் அவன் கடந்த காலத்தில் அதனை நம்பமுடியாது ஒதுக்கிவிட்டான். இப்பொழுது பக்தி ஞானம் தவம் அனைத்திலும் உயர்ந்து விளங்கும் ஸ்ரீநரசிம்ம பாரதி சுவாமிகள் பகவானின் மேன்மையைச் சிறப்பிப்பது கேட்டு அவனும் பகவானைக் கண்டு போற்றி வழிபட்டு ஒழுக விரும்பினான். அந்த இளைஞனே பின்னர் பகவானைத் தரிசித்து இந்நிகழ்ச்சியை பகவானிடம் தெரிவிக் கின்றனன். பகவானைப் போற்றும் துதி ஒன்றினை வடமொழியில் இயற்றிய சுவாமி சங்கரானந்த பாரதி என்பார் இந்நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து சிருங்கேரி

மடத்தின் தலைவரால் போற்றப்பட்டவர் என்று பகவானைப் போற்றிப் பாடினார்.

விரூபாக்ஷ குகையில் பகவான் இருந்துவந்த இறுதிக் காலம். சிருங்கேரி சங்கர மடத்தின் கிளையான சிவகங்கை மடத்தின் தலைவர் சங்கராச்சாரியர் திருவண்ணாமலைக்கு வருகை தந்திருந்த நேரம். மறைகளைக் கற்றுத் தேர்ந்தவர்களுக்குப் பரிசு அளித்துக் கவுரவிக்கும் மரபு மடத்தினுடையது. ஆதலால் பல வல்லுனர்கள் அழைக்கப்பட்டுச் சிறப்பிக்கப்படும் நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அதற்கு பகவான் ரமணரும் அழைக்கப்பட்டனர். ஆனால் அதில் பங்கு எடுத்துக் கொள்கின்ற அளவிற்கு மறைகளைத் தான் கற்கவில்லை எனக் கருதிய பகவான் அந் நிகழ்ச்சிக்குச் செல்லவில்லை. ஆனால் மடத்தின் தலைவரான சங்கராச்சாரியர் பகவானையே தேடி வந்துவிட்டார். முலைப்பால் தீர்த்த்த்திலிருந்து பகவான் வந்து கொண்டிருந்தனர். சங்கராச்சாரியரும் தனது குழுவினரோடு விரூபாக்ஷ குகைக்கு வந்து கொண்டிருந்தனர். இருவரும் வருகின்ற வழியிலேயே சந்தித்துக் கொண்டனர். ஒரு தட்டில் 116 ரூபாயையும், ஓரத்தில் வேலைப்பாடுகளோடு செய்யப்பட்ட ஷால் ஒன்றினையும் வைத்து பகவானை எடுத்துக் கொள்ளும் படி அவர் அன்புடன் வற்புறுத்தினர். சற்றே மௌனம் காத்திருந்த பகவான் வயது முதிர்ந்த சங்கராச்சாரியரின் மனம் நோகாது இருக்க வேண்டி ஷாலை மட்டும் எடுத்துக் கொண்டனர். பின்னர் அதன் வேலைப்பாடு களைக் கொண்ட பகுதியைக் கத்தரித்து எடுத்துவிட்டு சிறிது காலம் அந்த ஷாலைப் பயன்படுத்தி வந்தனர்.

1949. பூரி சங்கராச்சாரியர் பகவானுக்குக் கடிதம் ஒன்று அனுப்பியிருந்தனர். அதில் அவர் ஒரு உப நிடதச் சொற்றொடருக்கு விளக்கம் கேட்டிருந்தனர். ஹர கௌரி

சம்யோகே...அவச்சாய யோக என்பதில் வருகின்ற அவச்சாய யோகம் என்பது என்ன என்பதே அந்தக் கேள்வி. ஆச்சாரியருக்குத் தெரிந்த ஒன்றே என்று கூறிய பகவான் அவர் திருவண்ணாமலைக்கு வருகின்ற சமயத்தில் அதன் விளக்கத்தைத் தெளிவுபடுத்த உளம் கொண்டார். தெற்கே வருகை தந்து கொண்டிருந்த சங்கராச்சாரியர் ரமணாசிரமத்திற்கு வந்து இரண்டு நாட்கள் தங்கி யிருந்தனர். முதல் நாள் அன்று மாலையில் இருவரும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. பகவானுக்கு அருகில் ஓர் உயரிய இருக்கை சங்கராச்சாரியருக்கு அமைக்கப்பட்டு இருந்தது. ஆனால், அவரோ அந்த இருக்கையில் அமரவில்லை. மாறாக சற்றுத் தள்ளி தரையில் மான் தோலை விரித்து அதில் அமர்ந்துகொண்டனர். பகவானும் அவரும் ஒருவரை ஒருவர் பார்த்தவாறே இருந்தனர். அரை மணி நேரம் இவ்வாறு சென்று கொண்டிருந்தது. சுற்றி அடியவர்களும் பக்தர்களும் நிரம்பி இருந்தனர். அமைதி நிலவியது. இக் காட்சியைப் புகைப்படம் எடுக்கலாமே என ஒருவர் குரல் கொடுக்க பகவானும் சங்கராச்சாரியரும் புறமுகப்பட்டனர்.

அடுத்த நாளும் சந்திப்பு நிகழ்ந்தது, அவ் வமயம் ஆசாரியர் தனது கேள்விக்கு விளக்கம் கேட்டனர். அதற்கான விளக்கத்தை பகவான் கொடுக்க அதைக் கவனத்தோடு கேட்டவர் தெளிவு பெறவில்லை எனச் சொன்னார். அதைத் தொடர்ந்து பகவான் மோனத்தில் ஆழ்ந்து தனது கனிவான பார்வையை அவர் மீது பதித்தனர். சங்கராச்சாரியரும் கண்களை மூடி மோனத்தில் ஆழ்ந்தனர். அரை மணி நேரம் கழியும் வரை இந்நிலை நீடித்தது.. பின்னர் கண்களைத் திறந்து கொண்ட ஆச்சாரியர் தெளிவு பெற்றதாகக் கூறி தனது மகிழ்ச்சியினைத் தெரிவித்தார். ராமேசுவரத்திற்குச் சென்று திரும்பி வருகின்ற வழியில் மீண்டும் ரமணாசிரமத்திற்கு வருகை தந்து அன்னையாரின் ஆலய

குடமுழுக்குத் திருப்பணி நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி நிறைவு செய்தனர் பூரி சங்கராச்சாரியர் அவர்கள்.

அழகும் சுந்தரமும் இரண்டல்ல ஒரு பொருளே; ஆலியும் அம்புவும் இரண்டல்ல ஒரு பொருளே; சீவனும் சிவனும் இரண்டல்ல ஒரு பொருளே; உயிரும் இறையும் இரண்டல்ல ஒரு பொருளே; அகமும் நீயும் இரண்டல்ல ஒரு பொருளே. இது தான் அத்துவிதம் அல்லது இருமையின்மையின் சாரம். இருமையின்மை என்பது ஒரு மதம் அன்று; அது சீவனின் சொரூபம்; சீவனின் உண்மை. இதனைச் சொலாது சொலி விளக்கிய மூலம் ஆதி குரு தக்ஷிணாமூர்த்தியின் வடிவில் வந்த பூரண உணர்வே. இப் பூரண உணர்வே சிவனாராய் வடிவு கொண்டு சிவைக்கும், சண்முகனுக்கும் அருளிய அத்துவித விளக்கங்களே முறையே ஆகமத்தில் காணப் படும் தேவிகாலோத்திரமும் ஆன்மசாக்ஷாத்காரமும் ஆகும். இவ்விரண்டினையும் அழகிய தமிழ் வெண்பாக் களாக ஆக்கியிருக்கின்றனர் பகவான். தாருகா வனத்து ரிஷிகளுக்கும் சிவனார் அளித்த உபதேசத்தைத் தமிழில் உபதேச உந்தியாராக பகவான் அளித்துள்ளனர். அகந்தை உதித்த இடத்தில் ஒடுங்கி இருத்தலே கன்மமும், யோகமும், ஞானமும் பக்தியும் என்கின்ற உண்மையை மையமாக வைத்தது அப்பாடல். பின்னர், ஆதி சங்கரருடைய ஆன்மபோதத்தையும் இருமையின்மையை விளக்கும் தக்ஷிணாமூர்த்தி துதி முதலிய பாடல்களையும் பவ பந்த முக்திக்கு இச்சைப்பட்டு குருவருள் வேண்டி நிற்கும் அடியவர் நலன் பொருட்டு அவர்கள் சுவாத்தும பக்தி மிகுந்து விளங்குமாறு இனிய தமிழில் பகவான் நல்கியுள்ளனர்.

ஆனால் பகவான் படைத்த படைப்புக்கள் எவையும் சங்கல்பத்தால் எழுந்தவை அல்ல. ஞானத்தின் வெளிப்பாடாகவோ பிறரின் உந்துதல்களாலோ இயற்றப்பட்டவை ஆகும். ஆதி குரு தக்ஷிணாமூர்த்தி

மோன குருவாவர்; ஆதிசங்கரர் தெளிவுறுத்திய சத் வஸ்து இருமையற்ற ஏகப் பரம் பொருளாகிய சச்சிதானந்தமே; பகவான் ரமணர் அதையே ஏக வானமே, இதுவே மோனமே என்று ஆன்மவித்தைக் கீர்த்தனத்தில் சிறப்பித்து விளக்குகின்றார். ஆதி சங்கரரின் படைப்புக்களை மொழி ஆக்கம் செய்கின்ற பொழுது, அன்று வடமொழியில் சொல்லியதை இன்று அந்த சங்கரனே என்னுள் நின்று தமிழில் சொல்லுகின்றனன், என்கின்றார்.

பகவானது உபதேசம் உலகப் பொதுமறை ஆகும். மனம் கடந்த உண்மை; மதம் கடந்த உண்மையும் ஆகும். உள்ள பொருள் ஒன்றே. அது புலன்களாலும், மனதாலும் அறிபடமுடியாதது. ஆனால், அதனாலேயே புலன்களும் மனதும் அறியும் சக்தி உள்ளவையாய் இருக்கின்றன. தூலப் பொருள்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்ற பூத ஆகாசத்திலும், சூக்குமப் பொருள்கள் நிறைந்த மனோ ஆகாசத்திலும் அவ் உள்ள பொருளைக் காண முடியாது. தூல வெளியையும் சூக்கும வெளியையும் தன்னகத்தே கொண்டிருக்கின்ற (அறிவு) ஒளி வெளியே மெய்ப்பொருள் ஆகும். அது தான் தோற்ற மறைவு அற்ற, காலதேசங்கடந்த பூரண இருப்பு அறிவாகும். இது தான் பின்ன உயிர்கள் அனைத்தின் உள்ளும் விளங்கும் நான் நான் என்னும் உணர்வாகும்; தூல சூக்கும வெளிகளைப் பற்றாது அந்த நான் நான் என்னும் அகண்ட உணர்வினைப் பற்றி நின்றால் படைப்பின் வெளிப்பாட்டின் பொழுது தோன்றும் முதலுணர்வாகிய அதுவும் கால தேசம் கடந்து வெளிப்படாது நிலைக்கும் அதிட்டான இருப்பு அறிவு நித்தியமாய் இருக்கும். அது தான் நான் என்பதன் உண்மை.

உடல் உணர்வையும் மன உணர்வையும் கடந்து செல்லவில்லை என்றால், அவற்றிற்கு அதிட்டானமான,

*நான் நான் என்கின்ற அகண்டாகார பாவனையும் அற்ற, பூரண இருப்பு அறிவே நம் உண்மை, நம் சொருபம் என்பது தெளிவாகாது. தன்னை அறிவதற்குத் தனக்கு வேறாய் இன்னொரு தான் இல்லை. தன்னை அறிவதற்கு தனது புலன்களும் மனதும் உதவா. தான் அல்லாத பிறவற்றை அறிய மட்டுமே அவை இரண்டும் பயன்படும். பின் தன்னை எப்படி அறிவது, எதைக் கொண்டு அறிவது? தன் உண்மைப் புலன்களாலோ மனதாலோ அறிபடுவதற்கு ஒரு சுட்டுப் பொருள் இல்லை. தன்னை அறிய வேண்டுமாயின் தானாய் இருத்தலே போதும். புலனும் மனதும் தேவையே இல்லை. இதனாலன்றோ, 'ஐயே அதி சுலபம் ஆன்மவித்தை ஐயே அதி சுலபம்' என பகவான் வலியுறுத்தி இருக்கின்றனர்.*

*தானாய் இருத்தலே தன்னை அறிதலாம்*
*தான்இரண்டு அற்றதால் உந்தீபற*
*தன்மய நிட்டைஈது உந்தீபற*

*தனாதுஇயல் யாதுஎனத் தான்தெரி கிற்பின்*
*அனாதி அனந்தசத் உந்தீபற*
*அகண்ட சிதானந்தம் உந்தீபற.*

*- உபதேச உந்தியார்*

*இதற்கான ஒரே வழி நினைவு அனைத்தும் அடங்குவதே.*

*மெய்யாய் நிரந்தரம்தான் ஐயாது இருந்திடவும்*
*பொய்யாம் உடம்புஉலகு மெய்யாய் முளைத்துஎழும்பொய்*
*மையார் நினைவுஅணுவும் உய்யாது ஒடுக்கிடவே*
*மெய்யார் இதய வெளி வெய்யோன் சுயம்ஆன்மா –*
*விளங்குமே; இருள் அடங்குமே; இடர் ஒடுங்குமே;*
*இன்பம் பொங்குமே.*

*- ஆன்மவித்தை-1*

# மௌனமாயிருக்கை நன்று

பிர. கிரிதர ஜகீதஷ்

பவளக்குன்றில் பகவானைத் தன்னுடன் வீட்டிற்கு வருமாறு வருந்தி அழைத்த அன்னை அழகம்மைக்கு மகரிஷி அளித்த பதில்:

*அவரவர் பிராரப்தப்பிரகாரம் அதற்கானவன் ஆங்காங் கிருந்து ஆட்டுவிப்பன். என்றும் நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது; நடப்பது என்தடை செய்யினும் நில்லாது. இதுவே திண்ணம். ஆகலின், மௌனமா யிருக்கை நன்று."*

மேற்கண்ட பதிலின் பிண்டார்த்தம் 'மௌன மாயிருக்கை நன்று' என்ற வாக்கியம் ஆகும்.

யதேச்சையாக, அந்த இடத்திற்கு உரிய வாக்கியமாக அது தென்பட்டாலும், அந்நாள் முதற்கொண்டு பகவானுடைய உபதேசங்கள் அனைத்திலும் மையக்கருத்தாக அந்த ஒரு கருத்தே தொடர்ந்து இழையோடிருப்பதைக் காணலாம்.

மௌனம் வ்யாக்யா ப்ரகடித பரபிரம்ம தத்வம் யுவானம் என்ற தக்ஷிணாமூர்த்தி ஸ்லோகத்திற்குரிய முழு லக்ஷணமாய் ரமணரின் உபதேசங்கள் ஒளிர்கின்றன.

"வடஆல் அடியில் மஹாவிசித்திரம்

நடந்தது இவ்வண்ணம் ரமண சந்நிதியில்"

என்பது ரமண பக்தர்களின் அனுபவம்!

ரமண ஊற்றை மேலும் தோண்டிப் பார்ப்போமா?

சாஸ்திரத்தை சப்த பிரமாணம் என்று அழைப்பது மரபு. சப்தம் என்றால் ஒலி அல்லது வார்த்தை. பிரமாணம் என்றால் அறிவைக் கொடுக்கும் கருவி.

ஒரு பொருளின் ரூபத்தை, நிறத்தை அறிய கண் கருவியாக இருக்கிறது. ஒரு பொருளின் சுவையை அறிய நாக்கு கருவியாக இருக்கிறது. அதுபோல மெய்ப் பொருளை அறிய வேதம் என்கிற சாஸ்திரம் கருவியாக இருக்கிறது.

சொல்லற்கரியானை சொல்ல முயற்சி செய்கிறது சாஸ்திரம். அதுபோல பகவான் ரமணரின் சொற்கள், சொற்பதம் கடந்த துரிய மெய்ஞான நிலைக்கு நம்மை அழைத்துச் செல்கின்றன.

எப்படி?

எழும்பும் அகந்தை எழும்இடத்தை நீரில்

விழுந்தபொருள் காணவேண்டி - மூழ்குதல்போல்

கூர்ந்தமதியால் பேச்சுமூச்சு அடக்கிக் கொண்டுள்ளே

ஆழ்ந்து அறியவேண்டும் அறி.

மேற்கண்ட செய்யுளில் கவனம் வைத்து சரியாகப் புரிந்து கொள்ள வேண்டிய வரிகள் 'பேச்சுமூச்சு அடக்கிக் கொண்டு' என்பனவாகும்.

'பேச்சுமூச்சு அடக்கிக்கொண்டு' என்று பகவான் எதைக் குறிப்பிடுகிறார்?

சாஸ்திரம் மனதை உபலப்தி ஸ்தானம் என்று சொல்கிறது. அதாவது மனம்தான் பிரம்மத்தை அறியும் இடமாக இருக்கிறது என்பது இதன் பொருள்.

மின்சாரம் கம்பி முழுவதும் பாய்ந்து கொண்டிருந்தாலும் அதைப் பயன்படுத்த சரியான மின்வழியை (பிளக் பாயிண்ட்) பயன்படுத்தியாக வேண்டும்.

வேறு வழிகளில் மின்சாரத்தைப் பயன்படுத்தவோ, அறியவோ முடியாது. அதுபோல பரப்பிரம்மம் எங்கும் நீக்கமற நிறைந்திருந்தாலும், அதனுடைய இருப்பை

அதாவது ஸத் அம்சத்தை அறிகின்ற 'சித்' அம்சம் மனதில்தான் பிரகாசிக்கின்றது.

ஸத்தும் சித்தம் ஒருங்கே சேர்ந்து நான், நான் என்று இயல்பாக ஸ்புரித்துக் கொண்டிருக்கிறது. ஸ்வயம்பு லிங்கம் என்று வாஸ்தவத்தில் இந்த 'நான்'-ஐத்தான் குறிப்பிட வேண்டும்.

தான் ஸ்வயமாக விளங்கிக்கொண்டும், மற்றவைகளுக்கு இருப்புணர்வைக் கொடுத்து விளங்கிக் கொண்டும் இந்த 'நான்' இருந்து கொண்டிருக்கிறது. அந்த நான்-ஐ சரியாகப் புரிந்துகொண்டு அங்கேயே நிம்மதியாக நம்மை அமர வைப்பதே பகவான் ரமணரின் திட்டம்.

பேச்சை மூச்சை அடக்குதல் என்றால் வெறும் வாய் மௌனத்தையோ, பிராணாயாமத்தையோ பகவான் குறிப்பிடவில்லை.

இவர் சிங்கம் என்று ஒருவரை அறிமுகப்படுத்தும் பொழுது அந்த வாக்கியத்தை அப்படியே நேரடியாகப் பொருள்படுத்தினால் அதற்கு வாச்சியார்த்தம் என்று பொருள்.

ஒரு மனிதரைச் சிங்கம் என்று கூறும்பொழுது கண்டிப்பாக அவரை மிருகம் என்று பொருள்படுத்த மாட்டோம். ஆக வாச்சியார்த்தம் உதவாத இது போன்ற இடங்களில் அதன் உட்பொருளைப் புரிந்து கொள்வோம். சிங்கம் போன்று வீரமும், தீரமும் மிக்கவர் என்று பொருள் படுத்துவோம். இதற்கு லக்ஷியார்த்தம் என்று பெயர்.

அஹம் பிரம்மாஸ்மி என்ற மஹாவாக்கியத்தைக் கேட்கும் பொழுது இதைப் புரிந்து கொள்வதில் என்ன சிக்கல் இருக்கிறது ?

கண்ணீரும் கம்பலையுமான ஜீவனைப் பார்த்து நீ ஆனந்த சொரூபி என்று அழைப்பது கோமாளியைப்

பார்த்து, நீ கதாநாயகன் என்று அழைப்பதுபோல் நகைப்பிற்கு இடமாகும் அல்லவா? ஆனால் வேதவாக்கியம் ஒருபோதும் பொய்யானது அல்ல. சாஸ்திரம் ஈச்வர வாக்கு அல்லவா?

இந்த முரண்பாட்டை பகவான் சரிசெய்கிறார். இருளான குறுகிய சந்தில் தட்டுத்தடுமாறி, நடக்க வழி தெரியாமல் சிரமப்படும்பொழுது, கையில் டார்ச் லைட்டோடு ஒரு கரம் நமக்கு உதவிக்கு வந்தால் எப்படி ஒரு நிம்மதியிருக்கும்!

பகவானின் உபதேசங்கள் அவ்வண்ணம் ஒளிர்கின்றன!

ஆண்கள் பலரும் கூடியிருக்கும் கூட்டத்தில், உடன் கணவர் யார் என்று கேட்கும் தன் தோழியிடம், இவர்தான் என்று நேரிடையாகக் கூற அந்தப் பெண் வெட்கப்படுகிறாள். தோழி இவரா, இவரா என்று ஒவ்வொருவராகக் கேட்டு இவள் இல்லை, இல்லை என்று தலையையாட்ட, கடைசியில் நீக்க முடியாமல் எஞ்சியிருப்பவரை இவர்தான் இவள் கணவர் என்று புரிந்துகொள்வதுபோல, நேரிடையாக அல்லாமல் நீக்கும் முகமாக வேதங்கள் நமக்கு உபதேசம் செய்கின்றன.

'நான் யார்' என்ற வார்த்தை நேரிடையாக நான்-ஐ விளக்காமல், நான் அல்லாத அநாத்மாக்களை நீக்கி, விலக்கி சொரூபத்தை மட்டும் எஞ்சியிருக்க வைக்கிறது.

'த்விதீயாத்வை பயம் பவதி' இருமையிலிருந்து பயம் வருகிறது என்று உபநிஷத்துகள் கூறுகின்றன.

பிறப்பு இறப்பு, அறிவு அறியாமை, நன்மை தீமை, உயர்வு தாழ்வு, இன்பம் துன்பம் இவைகள் யாருக்கு? என்ற ஒரு வினா ஒரு நொடியில் அனைத்து இருமைகளையும் நீக்கி விடுகிறது. யாருக்கு என்ற விசாரம் நான்-ஐ நேரடியாக விளக்காமல், நான் அல்லாதவைகளை சாதகனிடமிருந்து நீக்கி விடுகிறது.

எப்பொழுதும் கங்குகரை காணாத சைதன்ய அம்சம் ஜீவனிடம் அனுபவத்தில் விளங்கிக்கொண்டுதான் இருக்கிறது. பிறகு இந்த ஜீவன் ஸம்ஸாரத் துயரத்தை அனுபவிக்க என்ன காரணம்?

நானாகிய சைதன்யமும், நானல்லாத மாயையாகிய சரீரமும் பரஸ்பரம் ஒன்றின் தர்மத்தை மற்றொன்றுக்கு பொய்யாகக் கொடுத்து கலந்ததுபோல் தோன்றுகின்றன. இந்தக் கலப்பிற்கு தாதாத்மியம் என்று பெயர்.

ஸ்படிக லிங்கத்திற்கு அருகில் வைக்கப்பட்ட சிவப்பு நிற மலரின் வர்ணத்தை லிங்கம் பொய்யாக ஏற்றுக்கொண்டு சிவப்பாகப் பிரதிபலிப்பதுபோல் நானும், நான் அல்லாததும் கலந்து பொய்யான அஹங்காரம் தோன்றியிருக்கிறது.

நான் என்கிற பேச்சு அதாவது எண்ணம் எழும்பொழுதே அதில் சைதன்ய அம்சத்தை மட்டும் வைத்துக்கொண்டு, மாயா காரியங்களாகிய சரீர, மன சேஷ்டைகளை இது யாருக்கு உண்டாயிற்று என்று உண்முகப்பட, அவைகள் இல்லாது போகின்றன.

வியாவஹாரிக உலகத்தில் ஒவ்வொரு நொடிப்பொழுதும் இந்த நுட்பமான சிகிச்சையைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற தீவிரத்தைக் காட்ட 'பேச்சு மூச்சு அடக்கிக் கொண்டு' என்று பகவான் கூறுகிறார்.

அழுக்கை அழுக்கால் நீக்குவதுபோல, விஷத்தை விஷத்தால் முறிப்பதுபோல அநாத்ம விஷய சப்தங்களை, ஆத்ம விஷய சப்தங்களால் நிர்விஷயம் செய்ய வேண்டும்.

சப்த ப்ரமாணமாகிய உபதேசங்கள் சப்தம், மௌனம் இரண்டிற்கும் சாக்ஷியாக இருக்கிற ஆத்மனைக் காட்டுகின்றன.

ஒருமுறை பகவானின் மௌனத்தைக் குறித்த கேள்வி ஒன்று பகவானிடம் முன் வைக்கப்பட்டது.

தங்களுடைய மௌனம் உபதேசமா? இதையே எங்களுடைய தீக்ஷையாக எடுத்துக் கொள்ளலாமா?

பகவான் ரமணரின் பதில் இதோ:

"உன்னை உன்னிடத்திலேயே இருத்தி வைப்பதுதான் குரு, சாஸ்த்ரங்களின் ஆகாங்க்ஷா (விருப்பம்) ஆகும். நானோ, நீயோ சப்தம், மௌனம் இரண்டையும் கடந்த சாக்ஷி என்பதுதான் தாத்பர்யம். எனது மௌனத்தை இப்படியா அப்படியா என்று நீ புரிந்துகொள்வது உனது அறியாமையே. ஒரு மஹாபுருஷரின் சொற்களையே புரிந்து கொள்ள முடியாதவர்கள் அவருடைய மௌனத்தை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்?

ஆகவே இப்படிப்பட்ட குழப்பங்களுக்குச் சிறிதும் இடம் தராமல், இந்தச் சந்தேகங்களுக்குரிய சமாதானத்தை உள், வெளி என்று தேடாமல், இந்தச் சந்தேகம் யாருக்கு என்று விசாரித்தால் அஞ்ஞான, ஞானத்திற்கு ஆதாரமான சொரூபம் மட்டுமே எஞ்சி நிற்கும்."

அநாத்ம விஷயங்களைக் குறித்த சத்திய புத்தியைத் தரும் எண்ணங்கள் மனதில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே ஆத்ம விஷயங்களைக் குறித்து சத்திய புத்தியைத் தரும் உபதேசங்கள் கண்டிப்பாகத் தேவையாயிருக்கிறது. குப்பைகளைக் கூட்டித் தள்ளும் துடைப்பம்போல் சாஸ்திர சிரவணம் அதாவது குருவின் உபதேசத்தைக் கேட்பது அவசியம்.

சொரூபம் விளங்கும்பொழுது உபதேசம் நின்று போகிறது.

பகவான் ரமணரின் சொற்கள் நமது அஹங்காரத்தை மௌனமாக்குகின்றன!

பகவான் ரமணரின் மௌனம் நமது ஸ்வரூபத்தை சுட்டிக் காட்டுகின்றன.

ரமண ஸ்மரணத்தில் நமது கவனத்தைத் தரவேண்டும். மேற்கொண்டு நிகழ வேண்டியவைகளை பகவான் ரமணரின் சந்நிதான விசேஷம் கவனித்துக் கொள்ளும்.

# பஜ கோவிந்தம்

## டாக்டர் சுதா சேஷய்யன், ஜி. ஸ்ரீகாந்த்

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

***உபதேசங்களின் சாரம்***

தம்முடைய குருவிடம் பெற்ற உபதேசங்கள், இலக்கணம் பயின்று கொண்டிருந்த பண்டிதரைப் பார்த்தவுடன் பஜ கோவிந்த ஸ்லோகங்களாகப் பரிணமித்தன.

*பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம் கோவிந்தம் பஜ மூடமதே*
*சம்ப்ராப்தே சன்னிஹிதே காலே நஹி ரக்ஷதி டுக்ருங் கரணே*

அறிவின் மூலம் இறைவனை அடைய முடியாது என்பதை ஆசார்யர் இந்த ஸ்லோகத்தில் தெளிவுறத் தெரிவிக்கிறார். வாழ்க்கையின் முடிவில் காலன் வந்து அழைக்கும்போது இந்த இலக்கணமா காப்பாற்றும்?

பதினாறு அகவை எட்டிய சிறுவனின் ஆயுட்காலம் முடிந்த நிலையில் அவனை அழைத்துச் செல்ல யமதர்மராஜன் வந்தான். பதினாறே வயது வாழ்ந்தாலும் தங்களுக்குப் பிறக்கும் மகன் ஞானச் செறிவோடு இருக்க வேண்டும் என்று நீண்ட நாள் புத்திர பாக்கியம் இல்லாத பெற்றோர்கள் இறைவனிடம் பிரார்த்தித்ததன் விளைவாகப் பிறந்த மகன் - அந்தப் பிரார்த்தனைக்கேற்ப மிருகண்டு முனிவரின் மகனான மார்க்கண்டேயன் அறிவில் சிறந்து விளங்கினான். ஆனால் அந்த அறிவா காலனிடமிருந்து அவனைக் காப்பாற்றியது? அறிவினால்

பயனில்லை என்றுணர்ந்து சிவனாரின் திருவடியில் சரணடைந்த பிள்ளையை, சிவனார் காலனைக் காலால் உதைத்துக் காத்தார்.

இந்தக் கருத்தைத்தான் ஆசார்யர் தம்முடைய முதல் ஸ்லோகத்திலேயே எடுத்துரைக்கிறார். இதை அறியாமல் லௌகிக விஷங்களில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் மனிதர்களை மூடர்கள் என்றே அழைக்கிறார். உண்மையில் மூடன் என்ற சொல் யாரைக் குறிக்கும்? இதற்கான பதிலைத் திருமூலர் நமக்கு அளிக்கிறார்.

"முகத்தினிற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்தினிற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்"

சாஸ்வதமான ஆனந்தத்தைத் தேடும் மனிதன் உள்முகப் பார்வையே வளர்த்துக் கொள்ள வேண்டும். அகத்தில் உறையும் பரமனை விடுத்து உலகியல் வாழ்க்கையில் மட்டுமே நாட்டம் கொண்டு லௌகிகத்தில் உழன்று கொண்டிருப்பவன் மூடன். இந்த மூட மதியை, இறைவனின் திருநாமத்தைப் பாடி, முக்தி மதியாக (முக்தி அடைவதற்கு உதவும் மதி) மாற்றுவதுதான் மனிதனின் நோக்கமாக அமைய வேண்டும் என்பது பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் உபதேசம்.

31 ஸ்லோகங்களைக் கொண்ட இந்த ஸ்தோத்திரம் "மோஹ முத்கரம்" என்று அழைக்கப் பெற்றது. மோஹத்தை உடைக்கும் சுற்றியல் என்றே இதற்குப் பொருள். இருந்தும் "பஜ கோவிந்தம்" என்ற பெயரே நாளடைவில் அனைவருக்கும் பரிச்சயமான பெயராக அமைந்துவிட்டது. அளவில் சிறியதாகத் தெரிந்தாலும் வேதாந்த சாரத்தை உள்ளடக்கிய இந்த பஜ கோவிந்தத்தை மிகத் தெளிவான மொழியில், இசைக்கு உகந்த விதத்தில் தந்த ஆசார்யரின் மகத்துவத்தை என்னென்று சொல்வது!

சாதாரணமாக இந்த ஸ்தோத்திரத்தை மூன்றாகப் பிரிக்கின்ற வழக்கமுண்டு - பஜ கோவிந்தம் என்ற முதல்

*ஸ்லோகத்தைத் தொடர்ந்து வரும் பன்னிரண்டு ஸ்லோகங்களை ஆசார்யர் இயற்றினார். இந்தப் பன்னிரண்டு ஸ்லோகங்களின் கோவை 'துவாதச மஞ்சரிகா' ஸ்தோத்திரம் என்றழைக்கப் பெறுகிறது. இவை தூண்டுகோலாக அமைய, தொடரும் பதினான்கு ஸ்லோகங்களை அவருடைய சிஷ்யர்கள் இயற்றியதாகக் கணக்கு; 'சதுர்தச மஞ்சரிகா' ஸ்தோத்திரம் எனும் இந்தக் கோவையைத் தொடர்ந்து முடிவுரையாக மேலும் நான்கு ஸ்லோகங்களை ஆசார்யர் அருளினார். இவ்வாறு மொத்தம் 31 ஸ்லோகங்களைக் கொண்ட ஸ்தோத்திரமாக இது திகழ்கிறது.*

## *போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து*

*அவிறின் துணையைக் கொண்டு இந்த சம்சார சாகரத்தைக் கடக்க இயலாது என்று கூறிய ஆசார்யர் மனிதனுக்கு இருக்கும் மற்றொரு மோஹத்தை அடுத்த ஸ்லோகத்தில் உடைத்தெறிகிறார்.*

***மூட ஜஹீஹி தன ஆகம த்ருஷ்ணாம்***
***குரு ஸத்புத்திம் மனஸி வித்ருஷ்ணாம்***
***யல்லபஸே நிஜ கர்மோபாத்தம்***
***வித்தம் தேன வினோதய சித்தம்***

*'மூடனே, தனத்தின் மீதுள்ள ஆசையை விட்டொழி; மனத்தின் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி, பரம்பொருளைப் பற்றிய சிந்தனைகளை வளர்த்துக் கொள். கர்மத்தின் மூலம் கிடைப்பதைக் கொண்டு (பூர்வ ஜன்ம கர்மம் உட்பட) மன நிறைவு அடைந்து கொள்' என்பதுதான் இந்த ஸ்லோகத்தில் ஆசார்யர் எடுத்துரைக்கும் கருத்து.*

*அறிவின் பின் அலையும் மனிதனின் நோக்கம்தான் என்ன? அறிவை வைத்துப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதுதான் பெரும்பாலானவர்களின் இலக்காக அமைகிறது. தனத்தின் மேலுள்ள ஆசையை*

விட்டொழிக்க வேண்டும் என்பதையே இந்த ஸ்லோகத்தில் ஆசார்யர் வலியுறுத்துகிறார்.

இந்த ஸ்லோகத்தைப் படிக்கும்போது மனத்தில் சிறு நெருடல் எழ வாய்ப்புண்டு. லௌகிக வாழ்க்கையின் சுழற்சியில் ஈடுபட்டிருக்கும் மனிதன், பணத்தைத் துறந்து வாழ்வது சாத்தியமா? ஆசார்யர் தனத்தைத் துறந்து விடு என்று சொல்வது அவ்வளவு நியாயமாகப் பட வில்லையே... கவனமாகப் படித்தால் இந்த ஸ்லோகத்தின் உட்கருத்து நமக்கும் புலப்படும். ஆசார்யர் தனத்தைத் துறக்கச் சொல்லவில்லை. அதன்மேல் நாம் வைத்திருக்கும் அளவுகடந்த ஆசையை மட்டுமே விட்டொழிக்கச் சொல்கிறார். 'த்ருஷ்ணா' என்ற சொல்லுக்கு அபரிமிதமான ஆசை என்றே பொருள்.

ஆசார்யரின் கிரந்தங்களில் 'ம்ருக த்ருஷ்ணாம்' என்ற அற்புதமான பிரயோகத்தைக் காணலாம். சமஸ்கிருதத்தில் ம்ருகம் என்ற சொல் மானைக் குறிக்கும். மானின் தன்மைதான் என்ன? காணல் நீரைப் பார்த்து ஓடுவது மானின் குணம். அந்த இடத்தை அடைந்தபின், நீரில்லாததைக் கண்டு ஏமாற்றமடையும் மான், சற்றுத் தள்ளித் தென்படும் மற்றொரு கானல் நீரைக் கண்டு மறுபடி ஓட்டமெடுக்கத் தொடங்கும். எத்தனை முறை ஏமாற்றத்தைச் சந்தித்தாலும், திரும்பத் திரும்பக் கானல் நீர் என்ற மாயையின் பின் ஓடும் மானின் சுபாவமே ம்ருக த்ருஷ்ணாம்.

இந்தச் சுபாவம் மனிதனுக்கும் பொருந்தும். பணம், பதவி, பேர், புகழ், சொத்து, அந்தஸ்து - இவற்றைத் துரத்திச் செல்லும் மனிதன், வாழ்வில் எவ்வளவு துன்பங்களைச் சந்திக்கிறான்? இருந்தும் இவற்றின் மேல் உள்ள நாட்டம் இம்மியளவாவது குறைகிறதா? உண்மையை உணராத மனிதன், படைத்தவரை மறந்து படைக்கப்பட்டதில் ஆழ்ந்து அமிழ்ந்து போவது எத்தனை வருத்தத்திற்குரிய விஷயம்!

*மரத்தை மறைத்தது மாமத யானை*
*மரத்தில் மறைந்தது மாமத யானை*
*பரத்தை மறைத்தது பார் முதல் பூதம்*
*பரத்தின் மறைந்தது பார் முதல் பூதம்*

என்ற மூலரின் வாக்கில் இந்த உண்மை புதைத்து கிடக்கிறது. யானையைப் பார்ப்பவனுக்கோ, அதைச் செய்ய உபயோகப்பட்ட மரம் கண்ணுக்குப் புலனாகாது. மூலப் பொருளான மரத்தைப் பார்ப்பவனுக்கோ யானையின் உருவம் புலப்படாது. அதே போன்று, படைப்பில் மூழ்கியிருப்பவனுக்குப் படைத்த கர்த்தா மறைந்து விடுகிறார்.

பஜ கோவிந்தத்தில் கூறப்பெற்றுள்ள அனைத்தையும் நடைமுறைப்படுத்த முடியும் என்பதே இந்த ஸ்தோத்திரத்தின் சிறப்பு. அறிவையும் தனத்தையும் பிரதானமாகக் கொண்டு வாழாதே என்றுரைத்த ஆசார்யர், நாம் எப்படி வாழ வேண்டும் என்பதையும் விளக்கியிருப்பது ஜகத்குருவான அவருடைய காருண்யத்தை உணர்த்துகிறது. கர்மத்தின் மூலம் கிடைப்பதில் திருப்தி பெறும் மனிதனே மகிழ்ச்சி அடைகிறான். தங்களுடைய ராஜ்ஜியம் அபகரிக்கப்பட்டு, காட்டில் வாழ வேண்டும் என்ற நிலையிலும் பாண்டவர்கள் சந்தோஷமாக இருந்தனர். ஆனால் அரண்மனையில் எல்லா சௌகரியத்துடன் உல்லாசமாக வாழ்ந்த துரியோதனனுக்கோ மருந்துக்குக்கூட அமைதியில்லை. அளவற்ற ஆசையும் அசூசையும் துரியோதனின் மனத்தில் விளைவித்த திருப்தியின்மையே இதற்குக் காரணம்.

இறைவனின் நாமத்தை ஜபித்துக் கொண்டு, கர்மத்தைச் செம்மையாகச் செய்வதன் மூலம் கிடைப்பதை அனுபவித்து, ஆனந்தமாக வாழ்வதே மனிதனின் குறிக்கோளாக அமைய வேண்டும்.

## *காயமே இது பொய்யடா*

முதல் இரண்டு ஸ்லோகங்களில் அறிவு மற்றும் பணத்தின் மேல் உள்ள அளவற்ற ஆசையைப் பழித்த ஆசார்யர், மூன்றாவது ஸ்லோகத்தில் தவிர்க்க வேண்டிய மற்றொன்றைப் பற்றி விரிவுரைக்கிறார்.

*நாரீ ஸ்தனபர நாபி தேஸம்*
*த்ருஷ்ட்வா மா கா மோஹா வேஷம்*
*ஏதன் மாம்ஸ வஸாதி விகாரம்*
*மனஸி விசிந்தய வாரம் வாரம்*

'பெண்ணின் பருத்த மார்பையும் மற்ற அங்க லாவண்யங்களையும் கண்டு மோஹத்தின் வயப்பட்டு விடாதே. தசை, கொழுப்பு போன்றவற்றினால் ஏற்படும் மாறுதல்களே உடலழகுக்கான காரணங்கள். இதைத் தெளிவாக உணர்ந்து கொள்' என்றுரைக்கிறார்.

பெண்களின் உடலழகைக் கண்டு மயங்கும் மனிதனைச் சிந்திக்க வைப்பதாக இந்த ஸ்லோகம் அமைந்திருக்கிறது. காஞ்சன (தனம்), காமினியைத் (பெண்) துறத்தல் வேண்டும் என்பது தொன்றுதொட்ட உபதேசம். இளமை ததும்பும் உடலழகைக் கண்டு மோஹம் கொள்ளும் சாதகனுக்கு அவை பெரும் இடையூறுகளாக அமைகின்றன.

திருமண்டங்குடியில் குடுமி சோழிய பிராம்மண குலத்தில் பிறந்த விப்ரநாராயணர் (பிற்காலத்தில் தொண்டரடிப்பொடி ஆழ்வாராகத் திகழ்ந்தவர்), ரங்கநாதர் மீது கொண்ட அன்பினால் நந்தவனம் அமைத்து திருவரங்கப் பெருமாளுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்வதையே தம்முடைய பாக்கியமாகக் கருதினார். அரங்கனைத் தவிர யாரையும் ஏறெடுத்துக்கூட பாராமல், தன்னுடைய கைங்கரியத்தில் மூழ்கிப் போயிருந்தார்.

ஒருநாள், இறைவனுடைய திருவிளையாடலின் பொருட்டு, தம்முடைய நந்தவனத்திற்கு வந்த தேவதேவி என்ற பெண்ணைப் பார்த்தார்; மையல் கொண்டார். அவளிடம் மனத்தைப் பறிகொடுத்தார். அரங்கனையும் கைங்கர்யத்தையும் அறவே மறந்தார். தேவதேவியே கதி என்ற நிலையை அடைந்தார். தம்முடைய பொன், பொருளையெல்லாம் அவளுக்கே அர்ப்பணித்தார். காலம் கழிந்தது; ஏழ்மை அவரைத் தழுவியது. இருந்தும் தேவதேவியை மறந்தாரில்லை; அவளையே மணந்துகொள்ள ஆசைப்பட்டார்; ஆனால் விப்ர நாராயணருடைய ஏழ்மையைக் கண்ட அவளுடைய தாயார் மறுத்துவிட, மனமுடைந்தார். தேவதேவி இல்லாமல் க்ஷண நேரம்கூட வாழ முடியாது என்ற நிலையை அடைந்த விப்ரநாராயணரை அந்த மாயையிலிருந்து விடுவிக்க சாக்ஷாத் ஸ்ரீமன் நாராயணனே முடிவெடுத்தார்.

சிறுவனின் வேஷம் பூண்டு தங்க வட்டிலொன்றை தேவதேவியின் தாயாரிடத்தில் விப்ரநாராயணர் கொடுத்ததாகச் சொல்லிக் கொடுத்தார். வரப் போகும் துன்பம் தெரியாமல் அந்தத் தாயார் மகிழ்ச்சியுடன் அதை வாங்கிக் கொண்டாள். தன் பெண்ணை விப்ர நாராயணருக்கே திருமணம் செய்து கொடுப்பது என்ற முடிவுக்கு வந்தாள்.

மறுநாள் கோயில் கர்ப்பகிருஹத்தைத் திறந்த பட்டர், பதற்றத்தின் உச்சியை அடைந்தார். பெருமாளின் திருவமுது வைக்கப்படும் தங்க வட்டிலைக் காணோம். செய்தியை மன்னனிடத்தில் தெரிவித்தார். மன்னன் விசாரணைக்கு ஆணையிட, தேவதேவியின் இல்லத்தில் பணிசெய்த பணிப்பெண், அந்த வீட்டில் தங்க வட்டில் இருப்பதை அரசவைக்குத் தெரிவிக்க... சினங்கொண்ட மன்னனிடம் தேவதேவியின் தாயார் நடந்தவற்றைக் கூற... ஒன்றுமே அறியாமல் நந்தவனத்தில் ஆழ்ந்த

*சிந்தனையிலிருந்த விப்ரநாராயணர் சிறை செய்யப் பட்டார்.*

*அன்றிரவு, பெருமாளே மன்னனின் கனவில் தோன்றி நடந்தவற்றைக் கூறி, விப்ரநாராயணரை விடுவிக்குமாறு பணித்தார். நடந்ததை அறிந்த விப்ரநாராயணர், தம்முடைய தவற்றை உணர்ந்தார். பெண்ணாசையினால் பொன்னான உன்னை மறந்தேனே என்று பெருமாளின் திருவடியில் சரண் புக... தொண்டரடிப்பொடி ஆழ்வாராகும் பேறு பெற்றார்.*

*தியாக பிரம்மத்தால்கூட காமத்தைத் துறந்த பின்தான் ராம கதையை எழுத முடிந்தது என்பது வரலாறு. மஹான்களுக்கே இந்தக் கதியென்றால், இப்பேர்ப்பட்ட காமத்தை சாதாரண ஜீவராசிகளான நம்மால் எப்படி விட்டொழிக்க முடியும்? ஆணும் பெண்ணும் ஒருவரின்பால் ஒருவர் ஈர்க்கப் பெறுவது உயிரியற் காரணங்களினால் ஏற்படக் கூடிய இயற்கையான நிகழ்வு. அதைத் துறப்பது சாத்தியமா? இவ்வாறான கேள்விகளுக்கு ஆசார்யரே விடை அளிக்கிறார்.*

*இந்த உடல் என்பது யாது? உடலின் அழகுக்கோ அழகின்மைக்கோ எது காரணம்? முதுமை தழுவிய உடலில் அழகு குன்றிப்போய் விடுவதற்கான காரணம் என்ன? இத்தகைய சிந்தனைகளை நம் மனத்தில் அசைபோட, இந்த உடல் என்பது எலும்புகள், தசை, கொழுப்பினால் ஆன ஒரு மூட்டை; அவற்றின் அமைப்பை வைத்து உடல் அழகு பெறுகிறது; அவற்றின் மாறுதல்கள் உடலின் அழகைக் குலைக்கவோ மிகுதிப்படுத்தவோ வலிமை வாய்ந்தன என்ற பதில்களின் எதிரொலியை நம்மால் கேட்க முடியும். இவ்வாறான எதிர்மறைச் சிந்தனைகளை மனத்தில் திரும்பத் திரும்ப யோசித்துப் பார்ப்பதுதான் இந்த மாயையிலிருந்து விடுபட, இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆசார்யர் நமக்களிக்கும் வழி.*



*இந்த வழிக்கு யோக சாஸ்திரத்தில் பிரதிபக்ஷ பாவனை என்று பெயர். இயல்புக்குப் புறம்பான, ஆனால் பகுத்தறிவுக்குப் பொருத்தமான சிந்தனைகள் மெல்ல மெல்ல நம்மை முதிர்ச்சியடையச் செய்து மனத்தில் உண்மை உணர்வை மிளிரச் செய்கின்றன.*

*'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா' என்ற சித்தர் பாட்டுக்கேற்ப இந்த உடலின் நிலையற்ற தன்மையை வலியுறுத்துவதற்காக பஜ கோவிந்தத்தின் மூன்றாவது ஸ்லோகம் அமைந்திருக்கிறது.*

*(அடுத்த இதழில் முடியும்)*

# நானெனுஞ் சொல்லின் நல்லர்த்தம்

## மு.சிவப்பிரகாசம் பிள்ளை

நான் என்கிற பொருள் ஒன்றுள்ளது. இப்பொருள் தேகமே தன்னுடைய சொரூபமென்று மயங்குகிறது. ஏன் மயங்குகிறதென்றால், அந்த நானெனும் பொருள் தனது உண்மைச்சொருபத்தை உணரவில்லை; அதனால் மயங்குகிறது. தனது உண்மைச்சொருபத்தை அந்த நானெனும் வஸ்து உணரவில்லை யெனினும், ஏன் தேகத்தைத் தானென்று மயங்க வேண்டும்?

ஜனனமுதல் மரணம்வரையில், தூக்ககாலம் போக மற்ற காலமெல்லாம், இரண்டும் கூடியே நிற்பதாலும், தேகத்தின் கனத்தையும், அதன்கண் உண்டாகும் வலி, எரிச்சல், முதலிய துன்பங்களையும், பலம், குளிர்ச்சி முதலிய இன்பங்களையும், தேகத்தின்கண் உள்ள கருவிகளைக் கொண்டே அறிவதாலும், தேகத்திற்கு வேறாய் உலகிலுள்ள பொருள்களை தேகத்தின்கண் உள்ள ஐந்து ஞானேந்திரியங்கள் மூலமாகவே அறிவதாலும், தனது ஸங்கற்பத்தால் தேகத்திலுள்ள ஐந்து கன்மேந்திரியங்களையும் வேறுசில கருவிகளையும் நேரே அன்னிய உதவியின்றி இயக்குகின்றமையாலும், தேகத்திற்கு வேறாய் உலகிலுள்ள பொருள்களை ஐந்து கன்மேந்திரியங்களைக் கொண்டே இயக்குகின்றமை யாலும், மூளையின் றொழிலின்றித் தோன்றா சூக்குமத் தோற்றங்களுற்ற பின்னரே புத்தி விளங்குதலாலும், ஸங்கற்பங்கள் பிறப்பதாலும், தேகமே தானென்று நானெனும் பொருள் மயங்குகின்றது.



*அப்படியானால் ஜனித்து ஒரு வருஷங்கூட ஆகாத சிறு சிசுவும் தேகமே நானென்று மயங்க வேண்டிய காரணமென்ன?*

சிசுக்களும் தேகமே தமது சொரூபமென்று கருதுவது உண்மையே. அதற்குக் காரணம் பூர்வஜன்மங்களில் தேகங்களோடு கூடியிருந்த பழக்கமே என்றுதான் சொல்ல வேண்டும்.

*நானெனும் வஸ்து முதல் முதல் தேகத்தோடு மேற்சொல்லியவாறு இணைக்கப்பட்ட காலம் யாது?*

அவ்வித இணைப்பு அனாதி காலமுதல் நிகழ்ந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

*தேகத்துக்கு வேறாய் நானென்று ஒரு பொருள் உண்டென்பதற்குப் பிரமாணம் யாது?*

1. நானென்கிற பொருள் தேகாதி பிரபஞ்சத்தை அறிகிறதென்பது அனுபவம். தேகாதி பிரபஞ்சம் என்னாலறியப்படுகிறதென்பதும் அனுபவ சித்தமான விஷயம். ஆகையால் நான் சித்து. தேகம் ஜடம்.

2. சுழுத்தியில் அதாவது நித்திரையில் தேகாதி பிரபஞ்சம் தோன்றவில்லை. தேகாதி பிரபஞ்சம் சாக்ர சொப்பனங்களில், அதாவது நனவு கனவுகளில் தோன்றுகிறது. சிலகாலம் தோன்றி சிலகாலம் தோன்றாமையால் தேகாதி பிரபஞ்சமானது தோற்ற மென்றும், அநித்தியமென்றும் சொல்லப் படுகிறது.

தூக்கத்திலே தேகாதிகள் எங்கு ஒடுங்குகின்றன? எவ்வாறு ஒடுங்குகின்றன? நனவில் எவ்வாறு உண்டாகு கின்றன?

இது விளங்காத விஷயமாயிருக்கிறது. ஆகையால், மாயையில் அல்லது அவித்தையில் ஒடுங்கி, அம்மாயை அல்லது அவித்தையினின்று தோன்றுவதாக சாஸ்திரங் களில் சொல்லப்படுகிறது. மாயை அல்லது அவித்தை யென்பது இத்தன்மையானதென்று அறியக்கூடாத ஒன்றென்றும் அச்சாஸ்திரங்களில் கூறப்படுகிறது. ஆகையால் தேகாதி உலகம் வெறும் தோற்றமே. ஆனால் நான் என்னும் பொருள் தோற்றமல்ல. ஸதோதயமாயிருக் கிறது. நானெனும் சித்து அல்லது அறிபொருள் இல்லாத காலம் இல்லை. தூக்கத்தில் ஒன்றுமில்லை என்று அறிந்த அறிவு எதுவோ அதுவே நான். சாக்ர சொப்பனங்களில் தேகாதி ஜகத்தின் தோற்றத்தையும், சுழுத்தியில் தேகாதி ஜகத்தின் அபாவத்தையும் (அதாவது தோன்றாமை அல்லது இல்லாமையும்) அறிந்து கொண்டு தான் தோன்றாமலும் மறையாமலும் நித்தியமாயிருக்கின்றது அந்த நானெனும் பொருள்.

மேற்சொல்லிய விஷயங்களிரண்டும் தேகத்திற்கு வேறாய் நான் என்கிற சித்து ஒன்று உண்டென்பதற்குப் பிரமாணமாம்.

தேகம் நானென்கிற மயக்கம் எவ்வாறு நீங்கும்?

நான் யார்? (அல்லது) என் சொரூபம்யாது? என்கிற விசாரணையால் அம்மயக்கம் நீங்கும்.

# திருரமணக் குறள்

## தாயுமானவன்

21 *அப்பா எனஅணைத்தார் அண்ணா மலையாரை*
*அப்படியே ஒன்றி அமர்ந்து.*

22 *பாரம் இறங்கப் பறந்தார் பஞ்சுடம்பாய்*
*நேரம் நிமிர்ந்த நிலை.*

23 *முடியிறக்க ஆடையிடை முற்றும் இழக்க*
*கடிதில் துறவியானார் காண்.*

24 *பிராமண சாமியாம்! பாலஞானி பூணூல்*
*இராதமெய் பூர்ண இனன்.*

25 *ஆயிரக்கால் பாதாள லிங்க சமாதி*
*வயிரந்தான் பாய்ந்த உளம்.*

26 *புழுபூச்சி நாளும் பதம்பார்த்தும் சித்தம்*
*நழுவா சமாதி நிலை.*

27 *ஐயன் குளத்து விநாயகர் பூசை*
*அய்யன் பழனிசாமி யால்.*

28 *கருணைச் சாமியிருக்க கல்லுச் சாமி?*
*குருமூர்த்த ஞானிக்குக் கை.*

29 *சுவாமிகள் சேஷாத்ரி தெள்ளனக் கண்டெடுத்த*
*பூவாம் பரிபூர்ண பொன்.*

30 பவழக் குன்றில் பிராம்மணச் சாமி
தவமகன்முன் யாசிக்கும் தாய்.

31 அழுது புலம்புவார் அன்னை; வை ராக்கியமாய்
வழுவா ஞான வேர்.

32 என்பிள்ளை அன்று; உன் தன்பிள்ளை ஈசனிடம்
தன்பிள்ளை ஒப்படைத்தார் தாய்.

33 ஊனக்கண்கள் காணும் ஊர்காணும் கல்மலையாய்
ஞானக்குன்று அன்றோ அருணை.

34 காந்தமாய் ஈர்த்த கருணை அருணையில்
சாந்தமுனி தோன்றினார் சாற்று.

35 இருக்கை குகைக்குள் விருபாட்சம்; ஓயாது
ஒருவன் குறித்து உளம்.

36 கையில் கமண்டலம் கைத்தடிதான் கோவணாண்டி
மெய்யில் மலையருணை ஞாநி.

37 மலைவாசம் ஆயுளுக்கும் மற்றுஉணர்வாம் அஃதில்
நிலைநின்ற ஞான நெறி.

38 கீரைக் கிழப்பாட்டி கையால் அமுதுண்டார்
பாரை பரிணமிக்கப் பார்.

39 நானார் நவின்றார் நான்மறை சாத்திரங்கள்
தானேதும் முன்தெரியா தவர்.

40 நாநார் தத்துவமில்; நாமதுவாய் உள்ளநிலை
தானாய் ஒளிரும் தெரி.

(தொடரும்)

# ரமண ஒளி

## ரமண ராஜசேகர்

*அன்பே ரமணர் உருவாகும்! - நல்*
*அருளே அவரது செயலாகும்!*
*இன்பம் அவரது புன்னகையே! - நம்*
*இதயம் திறப்பது அவர்விழியே!*

*மௌனமே அவரது பேச்சாகும்! - அதில்*
*மூழ்கிட மனமே சுகமாகும்!*
*கவனமே தியானத்தின் மொழியாகும்! - அது*
*கடவுளைக் காணும் வழியாகும்!*

*உன்னை அறிந்திடு உனக்குள்ளே! - அதில்*
*உள்ளொளி கண்டிடு மனத்துள்ளே!*
*முன்னால் வருவது ஆணவமே! - அது*
*மறைந்தால் அறிவது ஆனந்தமே!*

*வலப்புற இதயமே ஆன்மாவாம்! - இதில்*
*வசிப்பவர் உலகத்து ஞானியராம்!*
*நலம்தரும் தத்துவம் இதுவேயாம்! - நீ*
*"நான் யார்?" அறிந்திட சுகமேதான்!*

*ஆத்ம விசாரம் அறிந்திடுவாய்! - அதை*
*ஆளும் ரமணரைத் தெரிந்திடுவாய்!*
*பூத்திடும் பொன்னொளி இதயத்தில்! - இது*
*புரிந்ததும் ஆனந்தமே உலகத்தில்!*

# கிரிவலம்

*திருவண்ணாமலை கிரிவலத்தை பகவான் எப்போதும் ஊக்குவித்தார். உடல் நலம் குன்றியவர்கள்,முதியவர்கள் கூட கிரிவலம் செல்வதை ரமணர் தடுத்ததில்லை. அமைதியாக இறைவனை நினைத்துக் கொண்டு நடந்து செல்லுங்கள் என்றே அவர் கூறுவார். அனைவரும் திருவண்ணாமலையைச் சுற்றி வந்து இறைவனின் ஆசியைப் பெற வேண்டும் என்று சொல்லிக் கொண்டே யிருப்பார். பகவானும் பல முறை கிரிவலம் சென்றுள்ளார்.*

*பகவானது அடியாரான தேவராஜ முதலியார் தனது 'அனுதினமும் ஸ்ரீ பகவானுடன்' நூலில் (19-12-45 பிற்பகல்) பின்வருமாறு எழுதியுள்ளார்:*

*டாக்டர் சையதுக்கு வயதாகி, சில நோய்களும் இருப்பதால் கிரிவலம் வருவது சிரமம் என்றாலும் பகவான் தன் அடியார்கள் பிரதக்ஷிணம் செய்வதை அவசியமாகக் கருதியதால் அவரும் அவருடைய மனைவியும் ஒரு மாதத்திற்கு முன்பு பிரதக்ஷிணம் செய்யத் தீர்மானித்தனர். பகவானின் அனுமதி பெற்று அவர்கள் சிரமமோ ஆபத்தோ எதுவுமின்றி போய் வந்தனர். இன்று மறுபடியும் அவர்கள் கிரிவலம் போக பகவானிடம் அனுமதி பெற வந்தனர். ஓரிரண்டு முறை மலையைச் சுற்றினால், மலையே தன்னை வலம் வரும்படி இழுக்குமென்று பகவான் சொல்வதுண்டு. அது உண்மையென்று நான் கண்டுள்ளேன். சையது விஷயத்தில் அது இப்பொழுது நிகழ்கிறது.*

# செய்திகள்

## *திருவண்ணாமலை செய்திகள்*

### *ஸ்ரீ வித்யா ஹோமம்*

*ஸ்ரீ வித்யா ஹோமம் ஆச்ரமத்தில் மார்ச் மாதம் 15 ஆம் தேதி வெகு சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் மற்றும் ஜபங்களுடன் ஸ்ரீ சக்ர மேருவிற்கு பூஜை நடந்தேறியது. பூஜை முடிவில் கலசநீரைக் கொண்டு பகவான் மற்றும் மாத்ருபூதேச்வரர் சமாதிக்கு அபிஷேகம் செய்விக்கப்பெற்றது. அன்பர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு அம்பாளின் பூரண அனுக்கிரகத்தைப் பெற்றனர்.*

## *இனிவரும் நிகழ்வுகள்*

## *ரமண கேந்திரா டிரஸ்ட், மைலாப்பூர், சென்னை*

### *பகவான் ரமணரின் 63-வது ஆராதனை நிகழ்ச்சி நிரல்*

*5-5-2013 ஞாயிற்றுக்கிழமை கருத்தரங்கம்*

| | |
|---|---|
| *2.00* | *வேதபாராயணம்* |
| *3.00* | *ரமண பக்திப் பாடல்கள்* |
| *3.40* | *தலைமையுரை: பூஜ்யஸ்ரீ புத்திதானந்தா, ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன், சென்னை* |
| *4.15* | *ஏன் ரமணர் ? சொற்பொழிவு திருமதி. திருவேணி அம்மாள், கோவை* |
| *5.15* | *சொற்பொழிவு: டாக்டர் ராம் மோஹன்* |
| *6.00* | *தேநீர் இடைவேளை* |
| *6.15* | *திரு. T.A. வெங்கடேசன் (ரமணகவி), ரமணீயமான வாழ்வு, சொற்பொழிவு* |
| | *விழா கோர்த்தளிப்பவர்: திருமதி. வசந்தா ராகவன்* |

*7-5-2013 செவ்வாய்க்கிழமை*

| | |
|---|---|
| *7.00* | *மஹன்யாஸ ஏகாதச ருத்ராபிஷேகம்* |
| *10.00* | *ரமண சஹஸ்ரநாமம்* |
| *10.45* | *உள்ளது நாற்பது, அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம்* |
| *12.15* | *அன்ன பிரசாதம்* |
| *மாலை* | *பிரதோஷ பூஜை* |
| *4.00* | |
| *4.45* | *நாம ஸங்கீர்த்தனம், கும்பகோணம் அனந்த நாராயண பாகவதர்* |
| *5.45* | *ஹரிகதா, திருமதி. சியாமளா ராமச்சந்திரன்* |
| *6.45* | *பகவான் ரமணர் திருவுருவப் படம் மயிலை மாடவீதிகளில் திருவீதியுலா* |
| *7.15* | *அக்ஷரமணமாலை பாராயணம்* |

## ஸ்ரீமாத்ருபூதேச்வரர் மகாபூஜை
## (அன்னை அழகம்மை முக்தி தினம்)

*8.45 மணிக்கு வேதபாராயணம், 9.15 மணிக்கு ரமண பக்திப் பாடல்கள், 10.15 மாத்ருபூதேச்வரர் அஷ்டோத்திரம், ரமண சஹஸ்ரநாமம், 11.00 மணிக்கு தீபாராதனை, பிரஸாதம்*

## பசு லட்சுமி முக்தி வைபவம்

*ஜூன் 6ஆம் தேதி வியாழக்கிழமை 7.30 மணிக்கு கோ பூஜை, 8.00 மணிக்கு வேதபாராயணம், சஹஸ்ரநாம அர்ச்சனை, 9.15 மணிக்கு அக்ஷரமணமாலை மற்றும் தமிழ்ப் பாராயணம், 9.30 மணிக்கு தீபாராதனை, பிரஸாதம்.*

## ரமண சந்நிதிமுறை முற்றோதல்

*ஜூன் 29, சனிக்கிழமை மற்றும் ஜூன் 30 ஞாயிறன்று காலை முதல் மாலை வரை - உணவு இடைவேளை தவிர்த்து - ரமண சந்நிதிமுறை முற்றோதல் நடைபெறும். தலைமை: சூளைமேடு வி. ரமணன்.*

## *ரமணோதயம் அன்பர்களின் சந்திப்பு*

**நாள்: மே மாதம் 19 ஞாயிறு காலை 9.30 மணி முதல் மதியம்வரை. இடம்: ரமண கேந்திரா டிரஸ்ட், பழைய எண் 20, புதிய எண் 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600004. விரிவான தகவலுக்கு முதல் பக்கத்தில் காண்க.**

## *ஸ்ரீ ரமண பக்த சமாஜம், மேற்கு மாம்பலம்*

## *பகவான் ரமணரின் 63-வது ஆராதனை*

*14-4-2013 ஞாயிறன்று மாலை 6 மணிக்கு பகவான் ரமண மகரிஷிகளின் திருவுருவப் பட திருவூதி உலா, மேற்கு மாம்பலம் தம்மைய ரெட்டி தெருவிலுள்ள BVSN மூர்த்தி பள்ளியிலிருந்து துவங்கி, நாதஸ்வர மேள தாள ஒளி விளக்குகள் முன்செல்ல வேதபாராயணம் மற்றும் தமிழ்ப் பாராயணங்களுடன் சிறப்பாக நடைபெற உள்ளது. விழாவின் இறுதியில் தீபாராதனை மற்றும் பிரசாதம் வழங்கல். தொடர்பு: சூளைமேடு திரு.V ரமணன் 9444172623 M.K. வைத்யநாதன் 044-23716495*

## *ரமணாலயம், குரோம்பேட்டை*

## *பகவான் ரமணரின் 63-வது ஆராதனை*

*மே மாதம் 6ஆம் தேதி திங்கட்கிழமையன்று மாலை 6.00 மணியளவில் சிறப்புச் சொற்பொழிவு திருமதி. திருவேணி அம்மாள், கோவை.*

*மே 7 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு வேத பாராயணம்; 10 முதல் 11.30 மயிலை கபாலீஸ்வரர் கோயில் ஓதுவார் திருவாசக செந்நாவலர் சத்குருநாத ஓதுவார் ரமண சந்நிதிமுறை பாடுதல்; 12 மணிக்கு தீபாராதனை, பிரசாதம்.*

## *ஸ்ரீமாத்ருபூதேச்வரர் மகாபூஜை*

*ஜூன் 2 ஞாயிற்றுக்கிழமை, காலை 8.00 மணி துவங்கி மாலை 3.00 மணிவரை உணவு இடைவேளை தவிர்த்து திருவாசக முற்றோதல். தலைமை: திரு வி. சூளைமேடு ரமணன்.*

## *63 ஆவது ஆராதனை விழாவையொட்டி சிறப்பு தமிழ்ப் பாராயணங்கள்*

*6-4-2013 மற்றும் 7-4-2013 அன்று சென்னை திருமுல்லைவாயிலில் அமைந்துள்ள வைஷ்ணவி ஆலயத்தில் ரமண சந்நிதிமுறை முற்றோதல்.*

*17-4-2013 மற்றும் 18-4-2013 அன்று முருகனார் மந்திரம், இராமநாதபுரத்தில் ரமண சந்நிதிமுறை முற்றோதல் நடைபெறும்.*

*19-4-2013 அன்று உத்தரகோசமங்கை திருக்கோயிலில் திருவாசக முற்றோதல். தொடர்பு: திரு. சிரஞ்சீவி, 9360047936*

*மே மாதம் 3, 4 மற்றும் 5 ஆம் தேதிகளில் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்தில் ரமண பாதமாலை மற்றும் சிவப்பிரகாசம் பிள்ளையவர்களின் பாடல்கள் முற்றோதல்*

*மே 25, 26 - பொள்ளாச்சி ரமண கேந்திரத்தில் ரமண சந்நிதி முறை முற்றோதல், தொடர்பு: திருமதி. தமயந்தி ரமணகுமார், 9894048368/9843833378*

*ஜூன் 2 - ஞாயிறு - மகா பூஜையன்று ரமணாலயம் குரோம்பேட்டையில் திருவாசகம் முற்றோதல். தொடர்பு: திரு. குமார் ராஜா, 9444261296*

*ஜூன் 29 மற்றும் 30 அன்று ரமண கேந்திரம், மைலாப்பூர், சென்னை, ரமண சந்நிதிமுறை முற்றோதல், தொடர்பு: திரு. கண்ணன், மேலாளர், 9940418375*

*இவ்வனைத்து நிகழ்ச்சிகள் தொடர்பாக தொடர்பு கொள்ள வேண்டிய முக்கிய அமைப்பாளர்: சூளைமேடு திரு. வி. ரமணன், 9444172623.*

**தங்கள் பகுதிகளில் ரமண சந்நிதிமுறை முற்றோதல் நடைபெற விரும்பும் அன்பர்கள் ஆவன செய்ய அணுக வேண்டிய தொடர்பு: சூளைமேடு திரு. வி. ரமணன், 9444172623**

# இனிவரும் திருநாட்கள் – 2013

| | | | |
|---|---|---|---|
| மே | 7 | செவ்வாய் | பகவானது 63வது ஆராதனை |
| ஜூன் | 2 | ஞாயிறு | மகா பூஜை |
| | 20 | வியாழன் | பசு லட்சுமி தினம் |
| ஜூலை | 22 | திங்கள் | குரு பூர்ணிமா |
| செப்டம்பர் | 1 | சனி | அருணை விஜய தினம் |
| அக்டோபர் | 5 | சனி | நவராத்திரி தொடக்கம் |
| | 13 | ஞாயிறு | சரஸ்வதி பூஜை |
| | 14 | திங்கள் | விஜயதசமி |
| நவம்பர் | 3 | ஞாயிறு | தீபாவளி |
| | 8 | வெள்ளி | கார்த்திகை தீப விழா தொடக்கம் |
| | 17 | ஞாயிறு | கார்த்திகை தீபம் |
| டிசம்பர் | 19 | வியாழன் | ஸ்ரீ பகவானது 134-வது ஜயந்தி |

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் – 2013

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 25 | வியாழன் | அதிகாலை 3.54 | 26 | வெள்ளி | காலை 2.55 |
| மே | 24 | வெள்ளி | பகல் 12.38 | 25 | சனி | காலை 10.37 |
| ஜூன் | 22 | சனி | இரவு 8.10 | 23 | ஞாயிறு | மாலை 10.37 |
| ஜூலை | 22 | திங்கள் | அதிகாலை 3.00 | 22 | திங்கள் | இரவு 12.35 |

### ரமண இணையதளங்கள்

Sri Ramasramam, Tiruvannamalai
www.sriramanamaharshi.org

Arunachala Ashrama, New York
http://www.arunachala.org

Ramanalayam, Chromepet and for Ramanodhayam Issues
www.ramanalayam.org

சென்ற ஜயந்தி இதழில் வெளியான

**பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி கூறும் தியானம்**

என்னும் கட்டுரையை எழுதியவர் **ஸ்ரீமதி. புனிதவதி.**
இத்தகவல் விடுபட்டமைக்காக வருந்துகிறோம்.

## ரமணோதயம் காப்பு நிதி
## தொடரும் நன்கொடையாளர்கள்

| | | |
|---|---|---|
| திரு | துவாரகாநாதன், சென்னை-41 | 5000 |
| ஸ்ரீமதி | தர்மா சாட்டர்ஜி, நியூதில்லி | 5000 |
| திரு | சேர்மராஜன், ஆஸ்திரேலியா | 1000 |
| திரு | சத்யநாராயணா, சென்னை-36 | 2000 |
| திரு | துராஜியா, மலேசியா | 1000 |
| திரு | தத்தகுரு, பெங்களூரு | 2000 |

## ரமணோதயம்

Voluntary Services

| | |
|---|---|
| K. சுரேஷ் ஜானகிராமன் | 9444127770 |
| ராஜேஷ் M.S. | 9840075778 |
| வஸந்தா ராகவன் | 9445432335 |

### பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | .......... | 23612731 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| **குரோம்பேட்டை, ரமணாலயம்** | .......... | 9444261296 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| **புதுச்சேரி** ரமண கேந்திரம் | .......... | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| **பொள்ளாச்சி** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | .......... | 9486576687 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலையில் 15-3-2013 அன்று நடைபெற்ற ஸ்ரீவித்யா ஹோம நிகழ்வுகள்



